
விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:-பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 04 வெள்ளிக்கிழமை (17.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு திடீர் விஜயம்

## அரசியல்துறை அலுவலகத்தையும் பார்வையிட்டார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை கிளிநொச்சிக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். ஜனாதிபதியுடன் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத்தளபதிகள் உட்பட உயர் அதிகாரிகளும் சென்றிருந்தனர். ஜனாதிபதி தனது விஜயத்தின் போது விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம், சமாதானச் செயலகம் என்பவற்றையும் பார்வையிட்டார். (12ஆம் பக்கம் பார்க்க)


கிளிநொச்சியில் படையினருடன் ஜனாதிபதி.

## மீண்டுமொரு போர் நிறுத்தத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்

### பிரான்ஸும் பிரிட்டனும் கூட்டாக வேண்டுகோள்

(லண்டன்)

ஆபத்தான பகுதிகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் நகரக்கூடிய போதுமான கால அவகாசத்துடன் மீண்டுமொரு போர் நிறுத்ததை அமுல்படுத்த வேண்டுமென பிரிட்டனும் பிரான்ஸும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்ட மோதல் இடைநிறுத்த காலத்தை பயன்படுத்தி பொதுமக்களை மோதல்பகுதிகளிலிருந்து வெளியேற விடாமல் தடுத்ததாக விடுதலைப் புலிகள் மீது பிரிட்டனும் பிரான்ஸும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இதேவேளை பொதுமக்கள் மோதல் பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இருநாள் மோதல் நிறுத்த காலம் போதாது என்றும் எனவே இலங்கை (12ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளிவாய்க்கால் மீது எறிகணைத் தாக்குதல்

### 36 பேர் பலி; 43 பேர் படுகாயம்

(வவுனியா)

முல்லைத்தீவு முள்ளியவளை மக்கள் வாழ்விடங்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் 36 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 43 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மக்கள் பாதுகாப்பு வலயத்திலுள்ள முள்ளிவாய்க்கால் பகுதி மீது நேற்று வியாழக்கிழமை காலை 8.50 மணியளவில் ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் 36 பேர் உயிரிழந்துள்ளதுடன் 43 பேர் படுகாயமடைந்துள்ளனர். இத் தாக்குதல்களினால் மக்களின் ஏழு கூடாரங்கள் முற்றாக அழிந்து நாசமாகியுள்ளன.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு பொது மருத்துவ (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பிரதிநிதி கோத்தபாயவுடன் பேச்சு

(கொழும்பு)

கொழும்புக்கு பயணத்தை மேற்கொண்டு வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பிரதம அதிகாரி விஜய் நம்பியார், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழ் நாட்டின் பிரபல சோதிடர் 'சோதிட கலைமாமணி' சிவல்புரி சிங்காரம் எழுதும் புத்தாண்டில் உங்கள் சித்திரை மாதப் பலன்

## ஜனாதிபதியுடன் பேசாத கூட்டமைப்பினர் இந்தியாவுடன் பேசுவதில் அர்த்தமில்லை

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாராகவே இருக்கிறார்.

ஆனால் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இந்திய தலைமைகளுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் பேசுவதில் எத்தகைய அர்த்தமும் இல்லை என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்திய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகின்றமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இந்தியாவுக்கு சென்று அங்குள்ள தலைமைகளுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்துவதாக தெரியவருகின்றது.

ஜனநாயக நாட்டில் அரசியல் கட்சி ஒன்று வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம். அது குறித்து அரசாங்கத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு (12ஆம் பக்கம் பார்க்க)


முள்ளிவாய்க்கால் பகுதியில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் சிலர்.

## நோர்வே தூதரகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகம் தாக்கி சேதமாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு வாட் பிளேஸில் உள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக வண. பத்தரமுல்ல சீலாரத்ன தலைமையில் இடம்பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், நோர்வேயிலுள்ள இலங்கைத்தூதரகம் தாக்கப்பட்டமையைக் கண்டிப்பதாகவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இத் (12ஆம் பக்கம் பார்க்க)

# ராஜீவ்காந்தி கொலையில் நளினிக்கு தொடர்பு தொலைக்காட்சிப் பேட்டியில் பிரியங்கா விளக்கம்

(சென்னை)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்கு நளினியைப் போன்றவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். அது தொடர்பான வழக்கில் நளினி மற்றும் அவருடைய கணவர் உள்ளிட்டோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

பின்னர் சோனியா தலையீட்டால் நளினுக்கு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது. தற்போது வேலூர் சிறையில் நளினி அடைக்கப்பட்டுள்ளார். இதற்கிடையே ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா கடந்த ஆண்டு ரகசியமாக தமிழகத்திற்கு வந்தார்.

அப்போது சிறையில் இருக்கும் நளினியை தனியாக சந்தித்துப் பேசினார். இது குறித்து பரபரப்பாக பேசப்பட்ட போதிலும் நளினியிடம் பேசியது குறித்த விபரங்களை பிரியங்கா கூறவில்லை. இந்த சூழ்நிலையில் ஒரு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பட்டியளித்த பிரியங்காவிடம் நளினி சந்திப்பு குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த பிரியங்கா, வன்முறை மற்றும் இழப்புக்களுடன் அமைதி வழியை உருவாக்கவே அந்த சந்திப்பு நடந்தது.

சொந்த பாதிப்புக்கள் கார ணமாகவே இது போன்ற செயல்களில் (ராஜீவ்காந்தி கொலை) நளினியை போன்றவர்கள் ஈடுபட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். மற்றவர்களை புண்படுத்த வேண்டும் என்ற குறிக்கோள் அவர்களுக்குக் கிடையாது.

சிறையில் நளினியை சந்திக்கச் செல்லும் போது முதலில் அவரை மன்னிக்க வேண்டும் என்று கருதினேன். ஆனால் அவரை சந்தித்த போது, அவருக்கு மன்னிப்பு அளிக்க நான் யார்? என்பதை உணர்ந்தேன். ஏனென் றால் என்னைப் போலவே அவரும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்.

சொந்த பாதிப்பு காரணமாகவே இது போன்று (ராஜீவ் கொலைக்கு உடந்தையாக) செய்துள்ளார். சிறையில் இருந்து புறப்படும் போது அதை நான் புரிந்து கொண்டேன் என்று தெரிவித்தார். (ச-5)

# முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதலாம் அரையாண்டுக்கான இடைப்பரீட்சைகள் (Mid Exam) எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை முதல் நடைபெறும் எனவும், விரிவுரைகள் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் எனவும் பீடாதிபதி வே. தேவராஜா அறி வித்தார். (ச)

# மருத்துவமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவின் புதிய மருத்துவமனைத் திறப்பு விழா எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ரிச்சாட் வோக்ஸ் கலந்து சிறப் பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக நிக்கோட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன், யாழ். அரச அதிபர் க.கணேஷ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டநிபுணர் எம்.திருச்செல்வம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் திருமதி சண்டீபணி கொடித்துவக்கு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-4)

# இலங்கை நோக்கி வீச இருந்த சூறாவளி இந்தியாவை நோக்கி நகருகிறது

(சென்னை)

இலங்கை நோக்கி வீச இருந்த சூறாவளி இந்தியாவின் தமிழகத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் யாழ். குடாநாட்டிற்கு கிழக்கே சுமார் 1200 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் தமிழக கரையோரங்களை நோக்கியே நகர்கிறது என திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதனால் அடுத்த 48 மணி நேரத்தின் பின்னர் வடக்கில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யுமே தவிர சூறாவளித்தாக்கம் ஏற்படமாட்பாது என நேற்றுக் கூறியது.

தற்போது இலங்கையின் சகல பகுதிகளிலும் இரவு நேரங்களிலும் வெப்ப நிலை அதிகரித்து காணப்படுகிறது. இக்காலங்களில் இலங்கையில் சூரியன் உச்சத்தில் இருப்பதால் வெப்ப நிலை அதிகரித்திருப்பதுடன் பூமியின் உஷ்ண நிலையும் அதிகரிக்கின்றது. இரவு நேரங்களில் காற்று வீசினாலும் உஷ்ணமடைந்த காற்றாகவே வீசுகிறது. கடற்பரப்பிலிருந்து தரைப் பகுதியை நோக்கி காற்று வீசினாலும் கடற் பகுதியும் உஷ்ண நிலையிலேயே காணப்படுகிறது. இந்த நிலை இன்னும் ஓரிரு தினங்களுக்கு தொடரலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# அமெரிக்கத் தூதுவருடன் அமைச்சர் ரிஷாட் சந்திப்பு

இலங்கைக்காக அமெரிக்க தூதுவர் றொபேட் பிளேக், மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் ரிஷாத் பதியு தீனை நேற்றுக்காலை சந்தித்து உரையாடினார்.

வடக்கில் நலன்புரி நிலயங்களிலுள்ள பொது மக்களின் தேவைகள் குறித்தும் அவற்றை நிறை வேற்றும் வழிமுறைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டதாக மீள் குடியேற்றம் மற் றும் அனர்த்த நிவாரண அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-5)

# சமூக பாதுகாப்புச் சபைக்கு-2008 சிறப்பான பங்களிப்பை வழங்கிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின்-2008ஆம் ஆண்டு சிறப்பான பங்களிப்பினை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அர சாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம், சமூகசேவைகள் சமூக நலத்துறை அமைச்சின் மாவட்ட இணைப்பதிகாரி சில்வேஸ்திரி அலன்ரின் (S.A.உதயன்), உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி மகாராணி இராசரட்ணம், சமூக நலத் துறை திணைக்களத்தின் திட்ட இணைப்பாளர் ரி.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், சமூகசேவை உத்தியோகதர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை கரவெட்டி பிரதேச செயலகமும் இரண்டாம் இடத்தினை சங்கானை பிரதேச செயலகமும் மூன்றாம் இடத்தினை தெல்லிப்பழை பிரதேச செயலகமும் பெற்றுக் கொண்டன.

இப் பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் அரசாங்க அதிபரினால் கௌரவிக்கப்பட்டனர். 2008ம் ஆண்டு சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத்திட்ட நடைமுறைப்படுத் தலில் யாழ்ப்பாண மாவட்டம் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

# தூதரகத்தின் சேதங்களுக்கு நோர்வே நட்டஈடு வழங்குகிறது

(ஒஸ்லோ)

நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்கதயார் என நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படும் என நோர்வே அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டதனைத் தொடர்ந்து தூதரகத்தை அண்டிய பிரதேசத்திற்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் இலங்கையில் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும் என நோர்வே தூதரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே நோர்வேயின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்னியில் சிக்கியுள்ள அப்பாவி பொது மக்களை பாதுகாக்க இலங்கையில் பெருக்கெடுத்து ஓடும் இரத்த வெள்ளம் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)


## ஏல விற்பனை அறிவித்தல்

### தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 31.03.2008 வரை அடகு வைத்து 31.03.2009 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஏல விற்பனைத் திகதி: 23.05.2009 (சனிக்கிழமை) காலை 8.30 மணி**

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி | யாழ்ப்பாணக் கிளை,<br>இல: 496, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>T.P. : 021 222 2696 |

ஏல விற்பனை இரத்துச் செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு-03.

NSB

(C-2352)



## முதலாவது பிறந்ததின வாழ்த்து



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவப்பிரம்மஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள் ரதீபா தம்பதியினரின் செல்வப் புதல்வன் **பிரணவித்யசர்மா (வித்யன்)** தனது ஆயுஷ்ஹோம விழாவையும் முதலாவது பிறந்த தின விழாவையும் (17.04.2009) இன்று வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை சொர்ண சித்தி விநாயகர், வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான், மஞ்சவனப்பதி முருகன் திருவருளுடன் பல்கலைகளும் கற்று, சகல ஐஸ்வர்யங்களுடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தாத்தா
சிவப்பிரம்மஸ்ரீ
சொ. இரத்தினசபாபதிக்குருக்கள்


# மாவட்ட கலாசார பேரவையின் விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட கலாசாரப் பேரவையின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு பொதுச்சபை உறுப்பினர்களை தவறாது சமூக மளிக்குமாறு யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார். (ச)

# புதிய பாடத்திட்ட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரம் 2011 இற்கு இரசாயனவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட கருத்தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசி ரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஆசிரியர்களும் வளவாளரும் தவறாது சமூகமளிக்குமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் கேட்டுக்கொள்கிறது. (ஓ-4)

# இன்று ஒரு தகவல்

## மூளையும் அறிவும்

"அந்த ஆளுக்கு மூளை கூட அவனிடம் கொஞ்சம் பார்த்து நடந்து கொள்ள வேண்டும்" என்று சொல்வதுண்டு.

மூளைக்கும் அறிவுக்கும் சம்பந்தமுண்டு என்பது சரி. மூளை அதிகமாக இருந்தால் அறிவும் அதிகமாக இருக்கும் என்பது சரியா?

சாதாரண மனிதனின் மூளை அளவுக்கும் (Size) அறிவுத் திறனுக்கும் சம்பந்தமில்லை என்றுதான் இது வரைக்கும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் இதனை மறுக்கிறார்.

ஒருவருக்கு தலை பெரிதாக இருந்தால் அவருக்கு அறிவும் அதிகமாக இருக்கும் என்கிறார் அவர். அப்படியானால் நம்மூரில் நிறைய அறிவாளிகள் இருப்பார்கள் போலிருக்கே!

இந்த ஆராய்ச்சியாளர் அமெரிக்காவில் டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் இருக்கிறார். 'லீவில்லர்மான்' என்று பெயர். மூளையின் அளவு பெரிதாக பெரிதாக அறிவுத்திறனும் அதிகமாகும் என்பது அவரின் கண்டுபிடிப்பு.

அதனால் தலை பெரிதாக இருப்பவர்கள் நம்முடைய தலை இப்படி இருக்கிறதே என்று நினைத்து இனிமேல் கவலைப்பட வேண்டாம். அதற்காக பெருமைப்படலாம்.

ஒரு மனிதனின் மூளை எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்பதை அவன் தலையை திறக்காமலே கண்டுபிடிக்கும் வசதியெல்லாம் இப்பொழுது வந்துவிட்டது. இதற்கு (Magnetic Resonance Imaging) என்று பெயர். இந்த முறையில் மூளையின் அளவை துல்லியமாக கணக்கெடுத்து விடலாம்.

அந்த ஆராய்ச்சியாளர் 40 மாணவர்களை தேர்ந்தெடுத்து ஸ்கானிங் (Scaning) செய்தார். அவர்களது மூளையின் அளவையெல்லாம் குறித்துக் கொண்டார்.

அதன்பின்னர் அவர்களுக்கெல்லாம் (I.Q.Test) வைத்தார். அறிவுத்திறனை கண்டுபிடிக்கும் தேர்வு. தேர்வு முடிவுகளை ஆராய்ந்து பார்த்தார். இவ் ஆராய்ச்சியில் மூளையின் அளவு பெரிதாக உள்ளவர்களெல்லாம் முன்னணியில் இருக்கிறார்களாம்.

பொதுவாக ஒவ்வொருவரின் உடல் வாகுக்கும் உடற்பருமனுக்கும் ஏற்றாற் போல் மூளையின் அளவில் சிறிது வித்தியாசம் இருக்கும். அதையெல்லாம் சீராக்கிவிட்டு, விகிதாசாரப்படி பார்த்தால் பெரிய மூளை உள்ளவர்களுக்கு அதிக அறிவு இருப்பது தெரியவந்தது.

ஆண்களின் மூளை சராசரியாக 1425 கிராம் எடை இருக்குமாம். பெண்களின் மூளை சராசரியாக 1265 கிராம் எடை இருக்குமாம்.

காலப் போக்கில் மனித மூளை வரவர பெரிதாகிக் கொண்டே வருகிறதாம். ஆதிகால மனிதனின் மண்டையோட்டை பார்த்தால் அவர்களுடைய மூளை இப்பொழுது இருப்பவர்களின் மூளையை விட மிகவும் சிறியதாக இருந்திருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு நூற்றாண்டு கால மருத்துவ குறிப்புகளை ஆராய்ந்து பார்த்ததில், மனித மூளையின் எடை அதிகரித்துக் கொண்டு வருவது தெரிகிறதாம். அதனால் தான் இப்பொழுது இருப்பவர்களுக்கெல்லாம் தலைக்கணம் அதிகமாகி விட்டது போலிருக்கு!

மூளையின் பகுதிகளில் ஒன்றான பெருமூளையில் அதிகமான நரம்புக்கலங்கள் இருப்பது அறிவுத்திறன் அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கலாம் அல்லது அவற்றையெல்லாம் மூடியிருக்கும் மயலின் உறை பெரிதாக இருந்திருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எப்படியோ மனிதனுக்கு வரவர மூளையும் பெரிதாகிக் கொண்டு வருகிறது. அறிவும் அதிகமாகிக் கொண்டு வருகிறது. அது நல்லது தான். இருந்தாலும் அந்த அறிவு நல்ல விஷயத்துக்குப் பயன்பட்டால் பரவாயில்லை. நடைமுறையை பார்த்தால் அப்படி தெரியவில்லையே.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கலாசார பேரவையினால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட் டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

நி. யோகநாயகி - கலாநிதி. ஆ. தியாகராஜா. ம.ம.வித்தி, வி. பாலேந்திரன் -யாழ்ற்றன் கல்லூரி, ப. கிருபலா - சுந்தர மூர்த்தி நாயனார் வித்தி.

**கனிஷ்ட பிரிவு**

யோ. காந்தரூபன் - கலாநிதி ஆ. தியாகராஜா. ம.ம.வித்தி, ந. ராஜினி - வியாவில் சைவ வித்தி, சி. விசாளினி - கலாநிதி தியாகராஜா ம.ம. வித்தி.

**கவிதை - சிரேஷ்ட பிரிவு**

வி. பாலேந்திரன் - யாழ்ற்றன் கல்லூரி, ப. ரேவதி - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி, நி. யோகநாயகி - கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வித்தி.

**கனிஷ்ட பிரிவு**

கு. அமுதா, யோ. காந்தரூபன் - கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வித்தி, சி. தர்ஷிகா - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.

**திறந்த பிரிவு**

கோ. விசாகலிங்கம் - ஆலடி காரைநகர், ச. செல்வரூபி - மல்லிகை காரைநகர், கோ. நிஷாந்தினி - சடையாளி காரைநகர்.

**சிறுகதை - சிரேஷ்ட பிரிவு**

பி. கிருபயா -சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி, சி. சிவரஞ்சினி - கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வித்தி, க. தவரஞ்சனா - வியாவில் சைவ வித்தி.

**திறந்த பிரிவு**

சா. குகினா - விளானை களபூமி, காரைநகர், த. சுகந்தினி - இலந்தைச்சாலை காரைநகர், க. கலைச்சந்திரன் நடுத்தெரு, காரைநகர்.

**பாடல் - திறந்த பிரிவு**

ச. சிவதாஸ் - அல்விஸ் வீதி, காரைநகர், கோ. விசாகலிங்கம் - ஆலடி, காரைநகர், சோ. மகேந்திரன் - விளானை, காரைநகர்.

(ஓ-246)

# ஜப்பான் புலமைப்பரிசில் திட்டம்

(கொழும்பு)

ஜப்பான் அரசாங்கம் Monbukagakusho (Mext) புலமைப் பரிசில் திட்டம் - 2010 இன் கீழ், இலங்கை மாணவர்களுக்கு பட்டப் பின்படிப்பு ஆய்வு பட்டப்படிப்பு, தொழில் நுட்பக்கல்லூரி ஆகிய வகைகளில் புலமைப்பரிசில்களை வழங்கவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள், மே மாதம், 5ஆம் திகதிக்கு முன்னர் உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஜப்பான் தூதரகமும் உயர்கல்வி அமைச்சும் கூட்டாக நடத்தும் பரீட்சை மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் http: //www.mohe.gov.lk என்ற அமைச்சின் இணையத்தளத்திற்கு விஜயம் செய்து அதிலுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பத்தை தயாரித்து நேரடியாக *கல்வி அமைச்சு, இல. 18, வாட் பிளேஸ், கொழும்பு 07* என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்படுகிறார்கள்.

தமைமைகாண் பரீட்சையின் கடந்த கால வினாப்பத்திரங்களுக்கு http.//www. studyjapan.go.jp/en/toj/toj/0308e.html என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

(ஓ-6)

# சிங்கப்பூர் முகவர்களால் இலங்கை மாணவர்கள் ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்கள் அதிகரிப்பு

## சிங்கப்பூர் உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

இலங்கை மாணவர்கள் சிங்கப்பூர் முகவர்களால் அதிகளவில் ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்கள் நிகழ்ந்து வருவதாக சிங்கப்பூர் உயர்ஸ்தானிகர் ஜெப்ரி சமரகோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அதிக முறைப்பாடுகள் தமது உயர்ஸ்தானிகரகத்திற்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சி செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த தகவலினை வெளியிட்டுள்ளார். குறிப்பாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் சுகாதார துறை சார்ந்த தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாக கூறியே சில முகவர்களால் இவர்கள் ஏமாற்றப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு சிங்கப்பூருக்கு அழைத்து வரப்படும் சில மாணவர்கள் தமக்கான பயிற்சி நெறிகளை பின் பற்றுவதற்கு முன்னர் தற்காலிக பகுதிநேர வேலைகளில் ஈடுபட நேரிடுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இராசி பலன்

17.04.2009
(சித்திரை 04, வெள்ளிக்கிழமை)
அட்டமி முழுவதும்
உத்தராடம் முழுவதும்
இராகுகாலம் 10.34-12.04மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
அட்டமி, நவமி

| | |
|---|---|
| மேடம் | செய்தொழில் முன்னேற்றம், தெய்வ தரிசனம், மேன்மை, பாராட்டு. |
| இடபம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், அச்சமான நிலை, உடல் உழைப்பு, புதிய முயற்சி. |
| மிதுனம் | காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, அபகீர்த்தி, போசன சுகம். |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், குடும்ப மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும். |
| சிம்மம் | சுகவாழ்வு, சத்துருஜெயம், காரிய அனுகூலம், திடீர் பயணம். |
| கன்னி | வேலைச்சுமை, குடும்பக்கவலை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| துலாம் | பயந்த சுபாவம், உடல் நலக் குறைவு, நல்ல முயற்சி, தெய்வ சிந்தை. |
| விருச்சிகம் | தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், இனிய சம்பவம், அன்னியர் சந்திப்பு. |
| தனுசு | காரிய தாமதம், கடின வார்த்தை, தனவிரயம், குடும்பக் கவலை. |
| மகரம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பிரயாணம், சயன சுகக்குறைவு, சுபசெலவு, தந்தை வழி உறவு. |
| மீனம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பெருமையடைதல், தெய்வ தரிசனம். |

வளவன்

# க.பொ.த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்

**சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்**

து. புவனா-6A,3B, த. ஜதீபன் - 3A,3B,2C, அ. குயிலினி-3A,2B,3C, வி. சாந்தா-3A,2B,3C, ம. சௌமியா-3A,B,5C, ம.வக்சலா-3A,B,3C,S, யோ. கௌதமி-2A,3B,4C.

**பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்**

ம. பிரேந்திரா-7A,B, யோ. கீர்த்திஜா-6A,B,C,S, ந. தர்ஷனா -4A,B,3S, இ. றேக்கா-4A,2C,2S, க. மோகனாம்பிகை -3A,3C,2S, நா. ஜெயந்தினி-2A,2C,3S, க. துஷி-2A,4S.(ஓ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 120 | 140 |
| அவரை | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 25 | 30 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 35 | 35 |
| பெரிய வெங்காயம் | - | 100 |
| பாகற்காய் | 60 | 80 |
| வெண்டிக்காய் | 30,40 | 50 |
| கரணைக் கிழங்கு | 50 | 40 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 140 | 140 |
| போஞ்சி | - | - |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 |

## மூத்த பிரஜைகள் அவை அங்குரார்ப்பண வைபவம்

வல்வெட்டித்துறை மூத்த பிரஜைகள் அவை அங்குரார்ப்பண வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வல்வை அ.மி.த.க. பாடசாலையில் வல்வை நகராட்சி மன்ற செயலாளர் கு. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் சமூகநல திணைக்கள இணைப்பாளர் ரி. கிருபாகரன், பருத்தித்துறை பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் எஸ். சுரேந்திரா, பருத்தித்துறை பிரதேச செயலக உள வள உதவியாளர் ரி. துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## கோலப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்ட மட்ட ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கோலப் போட்டி 2 ஆம் தவணை ஆரம்பத்தில் யாழ். மத்திய கல்லூரியில் நடை பெறும் என வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)


கலைமதி பாலர் பாடசாலை முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டு மைதானத்தில் கலைமதி முன்பள்ளி தலைவர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வலிகிழக்கு பொறுப்பாளர் சி. தர்மராசா JP ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## இறுதிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் 2007/2008 ஆம் கல்வியாண்டு பட்ட மேற்கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான இறுதி பரீட்சைகள் மே மாதம் 2 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரை நடை பெறும் என பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)




## தபால் அறிமுக அட்டைகள் வழங்க நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி பாடசாலை மாணவர்களின் நலன் கருதி க. பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு தபால் திணைக்களம் தபால் அறிமுக அட்டைகளை வழங்க நடிவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஒரே நாளில் பல பாடசாலை மாணவர்களுக்கு உடனடியாக தபால் அறிமுக அட்டைகளை வழங்கவுள்ளனர். (ஓ-10)

# சுன்னாகம் ஐயனார் ஆலயத்தில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உண்டியல் மூலம் ரூ.40 ஆயிரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கென உண்டியல் மூலம் 40 ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டுள்ளதாக இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலைய மக்களுக்கு வழங்குவதற்காக இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தால் பல்வேறு விதமான முறையில் நிதி மற்றும் பொருட்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த செயல் திட்டத்தின் மூலம் இந்து ஆலயங்களில் நடைபெறும் திரு விழாக்களில் தனியான உண்டியல் வைக்கப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான திருவிழாவின் போது ஒரு நாளில் மட்டும் ரூபா 40 ஆயிரம் சேகரிக்கப்பட்டு ஆலய நிர்வாகத்தினரால் இந்து அமைப்புக்கள் ஒன்றியத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

நலன்புரி நிலைய மக்களுக்கு தேவையான அவசியமான பொருட்களை பல்வேறு அமைப்புக்கள் சேகரித்து யாழ். செயலக உயர் அதிகாரிகளிடம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## யாழ். பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக விளையாட் டுப் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நாளையும் நாளை மறுதினமும் (சனி, ஞாயிறு) நடைபெறவுள்ளது.

இதில் இறுதி நாள் நிகழ்வுகள் யாழ். பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ். ஜெ.றூபசிங்கம் யாழ். வலயக்கல்விப் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ந.பால சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (ஓ-4)

## சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவினால் கடந்த வருடம் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டிருந்த கட்டுரைப் போட்டி, பேச்சு போட்டி ஆகியவற்றில் பங்கு பற்றி சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளாத மாணவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று அலுவலக நேரத்தில் வருகை தந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மனித உரிமை ஆணைக்குழு கேட்டுக் கொள்கின்றது. (ஓ-30)

## இழந்த கல்வியை மீட்கும் செயல் திட்டம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் நலன்புரி நிலையங்களில் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து தங்கி இருக்கும் க.பொ.த.(சா/த) மாணவர்கள் 45 பேருக்கு இழந்த கல்வியை மீட்கும் செயற் திட்டம் சோஆ நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு கொடிகாமம் அ.த.க. பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-29)

## மரம் நடுகை விழா

(யாழ்ப்பாணம்)

கட்டை வேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் மரம் நடுகை விழா இன்று முற்பகல் 9 மணிக்கு அம்பம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு நகரில் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கணுவில் கிளைக் குழுத் தலைவரும் ஓய்வு பெற்ற காணிப் பதிவாளருமான சி. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து எதிர்வரும் 21 ஆம் திகதி கட்டைவேலி கிளையிலும், 23 ஆம் திகதி துன்னாலை வல்லியானந்தம் கிளையிலும் மரம் நடுகை இடம்பெறவுள்ளது. (ஓ-2)

## தேசிய அடையாள அட்டை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) பரீட்சையின் போது சகல மாணவர்களும் தமது தேசிய அடையாள அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப் பட்டுள்ளமையால் எதிர்வரும்ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தும் அவற்றை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது விண்ணப்பப்பத்திர இலக்கத்துடன மாவட்டச் செயலகத்திலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் இது வரையும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத மாணவர்களின் விண்ணப்பப்படிவங்களை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்பு உரிய பாடசாலை அதிபர் மூலம் அனுப்பி வைக்கு மாறும் யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி(A.R.V) இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 11.30 மணிவரை றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணி வரை குருநகர் தண்ணீர்த் தாங்கியடியிலும் வைத்து ஏற்றப் படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தவறாது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-2)

## குரு பூசைத் தினத்தை முன்னிட்ட போட்டிகள்

(வடமராட்சி)

மேலைப் புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 102 ஆவது குரு பூசைத் தினத்தை முன்னிட்ட போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் சதாவதானி சனசமூக நிலையத்தில் தலைவர் கி. குகநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது. (ஓ-10)

## ஆதன மீள் மதிப்பீடு

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினரால் அப்பகுதிக்குட்பட்ட மக்களிடம் ஆதன மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக சபை உத்தியோகத்தர்களால் ஆதனங்கள் அட்டவணைப்படுத்தப்படுகிறது. சபை உத்தியோகத்தர்களின் இந் நடவடிக்கைக்கு இப் பகுதி கணனி உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கி விபரங்களை கொடுத்து உதவுமாறு பிரதேச சபை செயலாளர் சி. வே. குலநாயகம் கேட்டுக் கொள்கின்றார்.

இது வரை ஆதன வரி செலுத்தாதவர்கள் நிலுவைகளைச் செலுத்தி உதவுமாறும் செயலாளர்கேட்டுள்ளார். (ஓ-10)

## மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைகளத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் யாழ் . இந்துக் கல்லூரியில் நாளையும் நாளை மறுதினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் கே. கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன், கௌரவ விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வி. கணேசராஜா, யோகி அழகுக் கலை நிலைய இயக்குநர் திருமதி யோகினி சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ஓ-4,30)



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவத்தில் அடியார்கள் பாற்குடம், தூக்குக்காவடி எடுத்து நேர்த்திகளை நிறைவேற்றுவதையும் பொங்கல் செய்து வழிபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

# இலங்கையில் தமிழர் 124

## சிங்களவரும் - தமிழரும்: இணைச் சாதனையாளர் 1070 – 1200

சிங்கள மக்கள் தொடர்பாகவும் அவர்கள் பின்வாங்கிச் சென்றமை சில முக்கிய விளைவுகளை உண்டு பண்ணின. தெற்கில் சிங்களக் குடியிருப்புக்கள் உறுதிபெற்று, தென் பகுதியில் வாழ்ந்த சிங்களவரல்லாதோரை உள்ளடக்கிய ஓர் இனக்குழுவாக அவர்கள் வளர்ச்சி பெற இப்பின் வாங்கல் உதவியது.

அனுராதபுரமும் பொலநறுவையும் கைவிடப் பட்ட பின் தமிழரது வடக்கையும் சிங்களரது தெற்கையும் பிரித்து வைக்கும் அடர்ந்த காடு ஒன்று படர்ந்த தென்னிந்தியப் படையெடுப் புக்கள் தொடர்ந்து ஏற்படாதவாறு சிங்கள அரசுக்கு ஒரு தாக்கத் தடுப்பு வலயத்தைத் தோற்றுவித்தது.

எனினும், தென்னிந்தியாவுடன் இருந்த உறவு தொடர்ந்து வளர்ந்தது. மேற்குக் கரைவழியாகவும் கிழக்குக் கரை வழியாகவும் இத் தொடர்பு நீடித்தது. தென்னிந்தியாவிலிருந்து மக்கள் வருகை நடைபெறுவது தடை பண்ணப்படவில்லை.

ஆனால் புதிதாக வந்தோர் வெகு விரைவில் சிங்கள இனக் குழுவுக் குள் கலந்து சிங்களவர் ஆகினர். சிங்கள மக்கள் மொழியும் மதமும் ஐரோப்பியர் வருகை வரை எந்த ஆபத்தையும் எதிர்நோக் காது பாதுகாப்புடன் இருக்கும் நிலை தோன்றியது.

### பின்னுரை

இந்நூல் புதிதாக எதுவும் கூறுவதற்காக எழுதப்படவில்லை. இதில் கூறப்பட்டவை ஏற்கனவே அறியப்பட்ட விஷயங்கள். மதிப்புக்குரிய புலமையாளர் எடுத்துரைத்தவை, பலர் மறந்தவை, வேற சிலர் கவனஞ் செலுத்த விரும்பாதவை- இவைதான் இங்கு கூறப்பட்டுள்ளவை.

இந்நூல் இலங்கையின் ஆதிவரலாற்றின் சில முக்கியான கூறுகளை இலங்கையர்க்கு எடுத்து விளக்குவதற்காக எழுதப்பட்டுள்ளது.

இலங்கையில் எவ்வாறு இரு பேரினக் குழுக்கள் வரலாற்றுத் தொடக்க காலத்திலிருந்து உருவாகிப் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் முழுமை யான ஆக்கம் பெற்று இலங்கையின் நிரந்தரப் பேரினக் குழுக்களாக மாறின என் பதை இந்நூல் படிப்படியாக எடுத்துக் காட் டுகின்றது.

ஒரு தாய்வயிற்றில் பிறந்த உடன் பிறப்புக்கள் இருவராகச் சிங்களவரும் தமிழரும் வளர்ந்து வந்ததை வரலாறு காட்டுகின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிவடையும் கட்டத்தில் இருவரும் பிரிந்து இலங்கையின் இருவேறு நிலப் பகுதிகளில் தத்தம் ஆட்சியமைப்புக்களை அமைத்து வேறாக வாழத் தொடங்கினர்.

இவ்வாறு வேறாக இருவருடைய வாழ்க்கையின் போக்குப் பிரிந்து சென்றாலும், இருவரும் ஒரு நாட்டின் உரிமையாளராகவே தம்மைக் கருதினர். வட பாகத்தில் தோன்றிய ஆட்சியமைப்பில் சிங்களரல்லாதோர் கூடி வாழ்ந்தனர். தென் பாகத்தில் இருந்த அரசில் சிங்களவர் கூடி வாழ்ந்தனர். ஆனாலும் இவ்விரு அமைப்புக்களின் ஆட்சியாளராக இருந்தோர் தம்மை முழு இலங்கையின் அதிபதிகளாகவே கருதினர்.

வட பகுதி அரசின் மன்னன் தன்னைக் தென்னிலங்கை மன்னவன் (அதாவது, இலங்கை மன்னன்) என அறிவிக்க, தென் பகுதி அரசின் மன்னனும் அவ்வாறே தன்னை இலங்கேஸ்வரன் (அதாவது, இலங்கை மன்னன் ) என்று கூறி ஒரே பதவியை இருவரும் கோரி ஒருவரை மற்றவர் அங்கீகரிக்காது ஆட்சி நடத்தினர்.

வடக்கின் ஆட்சியாளரும் தெற்கின் ஆட்சியாளரும் முழு நாட்டின் ஆட்சியுரிமையைக் கோரியபோதும், நடைமுறையில் வேறு வேறு அரசுகளை ஆள்பவராக இருந்தனர். இந்நிலையில் வடக்கில் வாழ்ந்த தமிழரும் தெற்கில் வாழ்ந்த சிங்கள மக்களும் ஒருவருக் கொருவர் தொடர்பில்லாது தனித்து வாழ்ந்தனர்.

இருவரையும் பிரிக்கும் வகையில் தீவின் நடுவே அடர்ந்த காடு அமைந்திருந்தது. எனினும், தென்னிந்தியாவிலிருந்து தொடர்ந்து தமிழரும் கேரளரும் பிறரும் வடக்குக்கும் தெற்குக்கும் புலம் பெயர்ந்து தொடர்ச்சியாக வந்தனர்.

பொலநறுவையின் வீழ்ச்சிக்குப் பின் சில சந்தர்ப்பங்களில் சிங் கள அரசரும் தமிழ் அரசரும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடியபோதும், தமிழ் மக்க ளுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பகைமை இருந்தது என்றுகொள்ள எந்த விதச் சான்றும் இல்லை.

### சமய உறவுகள்

ஐரோப்பியர் ஆட்சி இலங்கையில் பதினாறாம் நூற்றாண்டில் தொடங்கும் வரை சிங்களவர்- தமிழர் உறவுகள் பல துறைகளில் நெருங்கியதாக இருந்தன. இத்தகைய உறவுகள் பின்னர் மறைந்து போகும் ஒரு துறை சமயத்துறையாகும்.

எனினும் சில முக்கியமான வகைகளில் சமயத் துறையிலும் 1200க்குப் பின்னரும் உறவுகள் இருந்தமை கவனிக்கத்தக்கதே. சோழ நாட்டிலிருந்து தேரவாத பௌத்த துறவிகள் தொடர்ந்து சிங்கள அரசின் பௌத்த நிறுவனங்களுக்கு வந்து சென்றனர். முன்னர் குறிப்பிட்டதுபோல, பதின்மூன்றாம் நூற்றாண்டில் இரண்டாம் பராக்கிரமபாகு தனது அரசில் பௌத்த சங்கத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்காகச் சோழ நாட்டிலிருந்து மதிப்புப் பெற்ற, ஒழுக்கம் மிகுந்த தமிழ் பௌத்த துறவிகளை வரவழைத்து, அவர்கள் உதவியுடன் பௌத்த சங்கத்தைச் சுத்தி செய்து, மீண்டும் சீருடையசங்கம் ஒன்று இயங்குவதற்கு நடவடிக்கை எடுத்தான்.

அவனுக்குப் பின், பதினான்காம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த நாலாம் பராக்கிரமபாகு (1302–1326) சோழ நாட்டிலிருந்து பௌத்த மகாதேரர் ஒருவரை வரவழைத்து, மதிப்பு மிகுந்த பதவியாகிய ராஜகுருப் பதவிக்கு அவரை நியமித்தான்.

இந்தத் தமிழ் பௌத்த பிக்கு பல்வேறு மொழிகளில் தேர்ச்சி பெற்றுவராகவும், தத்துவ நூல்களைக் கற்றுணர்ந்தவராகவும், ஒழுக்கக் கட்டுப்பாடு உடையவராகவும், விளங்கினார் எனப் பாளி வரலாற்றேடாகிய

பேராசிரியர்
கா. இந்திரபாலா

சூளவங்ஸ நூலில் அதன் ஆசிரியராகிய சிங்கள பௌத்த பிக்கு தம்மகித்திதேரர் எழுதியுள்ளார்.

இவ்வாறு முன்னர் போலத் தமிழ்நாட்டு பௌத்த சங்கங்களுக்கும் சிங்ள அரசின் பௌத்த சங்கத்துக்கும் இடையில் பகைமை எதுவும் இல்லாது நெருங்கிய உறவு தொடர்ந்து இருந்ததைக் காணலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டளவில் பௌத்தம் தமிழ்நாட்டில் முற்றாக மறைந்து போக இந்த உறவும் முற்றுப்பெற்றது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 42



ஒபாமா நியூயோர்க்கை அடைந்த போது நேரம் இரவு 10 மணியைத் தாண்டி விட்டது. அவர் சந்திக்க வேண்டியவரின் வீட்டு அழைப்புமணியை அழுத்தினார். பதில் வரவில்லை. மீண்டும் மீண்டும் முயன்றார். பயன் ஏதும் இல்லை. ஏமாற்றமும் அந்தகாரமான தனிமையும் அவரை நிலைகுலைய வைக்கவில்லை.

தனது பர்சைத்திறந்து பார்த்தார். பயணிகள் தங்கிச் செல்லப் பயன்படும் ஹோட்டல் ஒன்றில் இரவைக் கழிக்கலாம் என்றால் அந்தச் செலவுக்குக்கூட அவரிடம் பணமில்லை. ஒபாமாவுக்கு சதீக் என்று ஒரு நண்பன் லொஸ் ஏஞ்சல்ஸில் இருக்கும்போது பழக்கமானவன். அவனிடம் போகலாம் என்றால் அவன் இரவு முழுவதும் ஒரு றெஸ்ரோறன்டில் வேலை பார்ப்பவன். விடிந்தால் தான் அவனோடு தொடர்பு கொள்ள முடியும்.

ஆகவே தனது பயணப்பெட்டிகளை இழுத்துக்கொண்டு வாசற்படியில் அமர்ந்தார். அப்போதுதான் தன் பின் பொக்கற்றில் வைத்துள்ள கடிதம் நினைவுக்கு வந்தது. லொஸ் ஏஞ்சல்ஸை விட்டு புறப்பட்டபோது தான் அது அவரின் கைக்கு வந்தது. நியூயோர்க் வரும் வரைக்கும் அதை தன்னோடு வைத்திருந்தார். அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது.

*அன்பு மகனே*

*நீண்ட காலத்துக்குப்பின் உன்னிடமிருந்து வந்த கடிதம் ஆனந்தம் கலந்த அதிர்ச்சியைத் தந்தது. நான் நலம். இந்த நாடு என்னிடமிருந்து எதை எதை எதிர்பார்த்து நிற்கிறதோ அவற்றையெல்லாம் நான் செய்து கொண்டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். நான் அண்மையில்தான் லண்டனிலிருந்து திரும்பியுள்ளேன். அங்கே நிதி முதலிய அரசாங்க விடயங்கள் பற்றி கலந்துரையாடி ஆவன செய்ய வேண்டியிருந்தது. அதிகம் பிரயாணங்கள் செய்ய வேண்டியிருந்தமையினால் தான் உனக்கு கடிதங்கள் எழுத முடியவில்லை. எப்படியாயினும் இனிமேல் அக்குறையை நிவர்த்தி செய்ய நினைக்கிறேன்.*

*இங்குள்ள உனது சகோதரர்களும் சகோதரிகளும் நலமே உளர். அவர்கள் தங்கள் வாழ்த்துக்களையும் இத்துடன் அனுப்புகிறார்கள். இவை பற்றியறிவதில் உனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கும். உனது பட்டப் படிப்பு முடிந்தவுடன் வீட்டுக்கு வருவது பற்றிய உன் முடிவை என்னைப் போலவே அவர்களும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள்.*

*எவ்வளவு காலம் இங்கு தங்கியிருக்கப் போகிறாய் என்பதைப் பற்றி நீ இங்கே வந்த பின் யோசிப்போம். பரி! நீ இங்கே தங்கப் போவது சில நாட்களாயினும் மிக முக்கியமான விடயம் என்னவென்றால் உனக்கு உன்னுடைய சொந்தபந்தங்களையும் நீ எந்த இடத்தைச்சேர்ந்தவன் என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான்.*

*தயைசெய்து நீ நன்றாக உன்னைக் கவனித்துக்கொள்ளவேண்டும். உன் அம்மா, ருட்டு ஸ்ரான்லி ஆகியோரைப் பற்றி விசாரித்ததாகச் சொல். உனது பதிலை விரைவில் எதிர்பார்க் கிறேன்.*

*அன்புடன்*
*அப்பா*

இக்கடிதத்தை உடனே மடித்து மீண்டும் பின் பொக்கற்றில் அடைந்துவிட்டார். அவரின் தந்தைக்கு கடிதம் எழுதுவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. கடந்த நான்கு வருடங்களாக ஒபாமாவுக்கும் தந்தைக்குமிடையிலான கடிதத்தொடர்பு அறுந்து விட்டது. பல தடவைகள் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மேலெழுந்தமானமாக எழுதத் தொடங்குவார். அன்புள்ள அப்பா அல்லது டடி அல்லது அன்புள்ள டாக்டர் ஒபாமா என்று மாறிமாறி விழித்து எழுதினார். ஆனால் இப்போதுதான் அவற்றிற்கு


ஜம்பொன்

அவர் ஆறுதலாக அமைதியாக பதில் எழுதியுள்ளார். அவர் ஒபாமாவின் அடையாளத்தை சுட்டிக்காட்டினார். அவருக்கு அது சுலபமாக இருந்தது. ஆனால் ஒபாமாவின் மனதில் அமைதியின்மையைக் கிளப்பிவிட்டிருந்தது. "எங்கே நான்?" என்ற வினாவுக்கு விடை காணத்தான் அவர் கொலம்பிய பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்க நியூயோர்க் வந்துள்ளார்.

நேரம் நடுநிசியைத் தாண்டிவிட்டது அங்கே ஒடுங்கிய வீதியில் ஓரமாக தன் பைகளை பக்கவாட்டில் வைத்து தூங்கி விட்டார். விடிந்ததும் முதல் வேலையாக நண்பன் சதீக்குக்கு போன் போட்டார். அவன் ஒபாமாவை வாடகைக் கார் ஒன்றில் தன்வீட்டுக்கு வருமாறு விபரங்களைக் கொடுத்தான். (தொடரும்)

# மும்பை தாக்குதல் வழக்கு விசாரணை ஆரம்பம்

# பாக். சட்டத்தரணியை நியமிக்க கசாப் கோரிக்கை



(மும்பை)

மும்பை தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை மும்பை ஆர்தர்ரோடு சிறையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதையொட்டி சிறைக்கு வெளியேயும், உள்ளேயும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தனக்காக வாதாட பாகிஸ்தான் சட்டத்தரணி ஒருவரை நியமிக்க வேண்டுமென, கைதான தீவிரவாதி அஜ்மல் கசாப் கோரிக்கை விடுத்தான்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம், மும்பையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், 200 பேர் கொல்லப்பட்டனர் ; ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். பாதுகாப்புப் படையினர் நடத்திய அதிரடியில் ஒன்பது தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அஜ்மல் கசாப் என்ற தீவிரவாதி மட்டும் கைது செய்யப்பட்டான்.

இவ்வழக்கில் ஏற்கனவே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. பயங்கரவாதி அஜ்மல் கசாப்பின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால், வழக்கு விசாரணையை மும்பை ஆர்தர்ரோடு சிறையிலேயே நடத்த தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக அங்கு சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த சிறப்பு நீதிமன்றில் மும்பைத் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் தொடங்கியது.

இதையொட்டி சிறையின் உள்ளேயும், வெளியேயும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதுவரை நிகழ்பட உரையாடல் முறையில் வழக்கு விசாரணையை சந்தித்து வந்த கசாப் நேற்று முன்தினம் முதன் முறையாக சிறப்பு நீதிமன்றத்திற்கு நேரில் அழைத்து வரப்பட்டான்.

அவனுடன் குற்றம் சாட்டப்பட்ட பாகிம் அன்சாரி மற்றும் சகாபுதீன் அகமது ஆகியோரும் ஆஜர்படுத்தப்பட்டனர். இதையடுத்து, வழக்கு விசாரணை ஆரம்பமானது. அப்போது கசாப்பிற்கு ஆதரவாக வாதாட நியமிக்கப்பட்ட பெண் சட்டத்தரணி அஞ்சலி வாக்மேரேயின் நியமனத்தை ரத்து செய்யுமாறு நீதிபதி தகிலியானி உத்தரவிட்டார்.

இதேவேளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட கசாப், தனக்கு சட்ட உதவி அளிக்க வேண்டும் எனக் கோரி பாகிஸ்தான் தூதரகத்திற்கு கடிதம் எழுதியதாகவும், அங்கிருந்து பதில் வரவில்லையென நீதிமன்ற தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் தனக்காக வாதாட பாகிஸ்தான் சட்டத்தரணி ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் மீண்டும் ஒரு முறை அனுமதி கோரி பாகிஸ்தான் தூதரகத்திற்கு விண்ணப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தான்.

உடன் பேசிய அரச சிறப்பு சட்டத்தரணி உஜவால் நிகாம், "கசாப்பின் வேண்டுகோள் முறையான வகையில் பாகிஸ்தான் தூதரகத்திற்கு தெரிவிக்கப்படும் என்றார். இதற்கு பதில் அளித்த நீதிபதி, "பாகிஸ்தான் தரப்பில் இருந்து பதில் வரும் வரை காத்திருக்க முடியாது. அதனால், கசாப்பின் சட்டத்தரணி தொடர்பாக ஒரு இறுதி முடிவு எடுக்கப்படும். வழக்கின் தன்மையைப் பொறுத்து, கசாப் விவகாரத்தில் நியாயமான நேர்மையான விசாரணை நடைபெற வேண்டும் என்று தெரிவித்தார். (ஓ-6)

## நளினி – முருகன் விடுதலை குறித்த மனு விசாரணை இன்று


முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1991 ஆம்ஆண்டு மே மாதம்21 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். அவர்கொலை பற்றி ஜெயின் கமிஷன் விசாரணை நடத்தியது. பூந்தமல்லிசிறப்பு நீதி மன்றத்தில் தனியாக விசாரணை நடத்தப்பட்டு நளினி, முருகன், சாந்தன், ராபர்ட்பயாஸ், ஜெயக்குமார், ரவி, அறிவு ஆகிய 7பேர் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

ஜெயின் கமிஷன் விசாரணை 1998ல் தான் முடிந்தது. அதற்கு முன்பே 7 பேருக்கும் பூந்தமல்லி நீதிமன்றம் தண்டனை விதித்து விட்டது. ஜெயின் கமிஷன் அறிக்கையில் புகார் கூறப்பட்ட சந்திரா சுவாமி சுப்பிரமணிய சாமி ஆகியோரை விட்டு விட்டார்கள். எனவே தண்டனை பெற்ற நளினி – முருகன் உட்பட 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார். இந்த மனு இன்று விசாரணைக்கு வருகிறது. (ஓ-6)

# சிதம்பரத்தின் துணையோடு இலங்கையில் போரை நிறுத்த மத்திய அரசை நிர்ப்பந்திக்கவும்

## கருணாநிதிக்கு இராமதாஸ் வேண்டுகோள்





(சென்னை)

உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்தின் துணையோடு இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதிக்கு பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும், பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடும் உரிமையும் இந்திய அரசுக்கு உள்ளது.

இதைப் பயன்படுத்தி இந்த கடைசி நிமிடத்திலாவது போரை நிறுத்தி தமிழினப் பேரழிவை தடுத்து நிறுத்த மத்திய அரசு முன்வர வேண்டும். 48 மணி நேர போர் நிறுத்தம் என்ற ஏமாற்று வேலையில் இலங்கை அரசு ஈடுபட்ட போது அது தங்களால் தான் நடந்தது என்று மார் தட்டியவர்களுக்கு தற்போது 'இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றினோம் எனப் பெயர் எடுக்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

மத்திய அமைச்சரான ப. சிதம்பரத்தின் துணையோடு "போரை நிறுத்துங்கள் ; அல்லது முன்புபோல விமானப் படையை அனுப்பி தமிழர்களைக் காப்போம் ; தமிழினப் பேரழிவை தடுத்து நிறுத்துவோம்" என்று இலங்கைக்கு எச்சரிக்கை விடுக்குமாறு மத்திய அரசை முதல்வர் கருணாநிதி நிர்ப்பந்திக்க வேண்டும்.

இதைச் சாதித்தால் அது வரலாற்றில் இடம்பெறும். இலங்கைத் தமிழர்களைக் காப்பதில் மத்திய அரசு இதுவரை கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. இப்போது கிடைத்திருக்கும் கடைசி சந்தர்ப்பத்தையாவது நழுவ விடக்கூடாது என்று சிதம்பரமும், கருணாநிதியும் மத்திய அரசுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

'இலங்கைத் தமிழர்களுக்காக எதையும் துறப்போம்' என்று பேசிய முதல்வர் கருணாநிதி, கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுமாறு மத்திய அரசை நோக்கி உரக்க குரல் கொடுக்க வேண்டும் என்று இராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ-6)

## பாரதச் செய்திகள்

# நளினியைச் சூழ்ந்திருந்த சிக்கல்களே தந்தையின் கொலைக்கு உடந்தையாக காரணம்

## நளினியின் சந்திப்புக் குறித்து பிரியங்கா





(புதுடில்லி)

எனது தந்தை ராஜீவ் காந்தியைக் கொல்ல வேண்டும் என்ற தீய நோக்கம் நளினிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. தன்னைச் சூழ்ந்திருந்த சிக்கல்களால் கொலைச் சதிக்கு நளினி உடந்தையாகிவிட்டதாகவே தெரிகிறது என்றும் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன் பழிவாங்க வேண்டும் ; தீங்கு செய்ய வேண்டும் என்ற நோக்கம் நளினிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. மேலும் பெரிய கொடூரத்தைச் செய்ய துணை போகிறோம் என்பதையும் அவர் உணர்ந்திந்ததாகத் தெரியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட நளினியை கடந்த ஆண்டு வேலூர் சிறையில் பிரியங்கா சந்தித்தார்.


இந்தச் சந்திப்பு அப்போது பரபரப்பாக பேசப்பட்டாலும் சந்திப்பின் நோக்கம் பற்றியோ நளினியிடம் பிரியங்கா பேசிய விவரங்களோ முழுமையாகவெளி வரவில்லை.

இந்த நிலையில், தற்போது தேர்தல் பிரசாரத்தையொட்டி செய்தியாளர்களை அடிக்கடி சந்திக்கும் பிரியங்கா, தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் நளினியைச் சந்தித்தது பற்றி குறிப்பிட்டார்.

எனது தந்தை ராஜீவ் காந்தியை கொல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலேயே, நளினி இந்தக் குற்றத்தைச் செய்திருக்கலாம். நளினியைச் சிறையில் சந்திக்கும் போது அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். தந்தையை இழந்து நான் துயரப்படுவதைப் போலவே அவரும் ஒரு வகையில் துயரத்தில் சிக்கியுள்ளார் என்பது அவரைச் சந்தித்த போது தெரிந்தது என்றார் பிரியங்கா.

ராஜீவ் கொலை வழக்கில் நளினிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அது சோனியா காந்தியின் கருணையால் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது். (ஓ-6)

# வாழும் கலை நிறுவனர் ஸ்ரீ ரவிசங்கர் 20 ஆம் திகதி வவுனியா வருகை



(சென்னை)

வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீ ரவி சங்கர் சுவாமிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா வரவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ரவிசங்கரின் வாழும் கலை அமைப்பின் மதுரை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை தமிழ் மக்கள் மிகவும் வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து அவர்கள் மீண்டு மறுமலர்ச்சி பெற அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் களுக்கு வாழும் கலையின் மூலமாக நிவாரணத் தெகை வழங்கப்படும்.

20 ஆம் திகதியன்று இலங்கையில் வவுனியாவிற்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கும் ரவிசங்கர் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறவுள்ளார் என்றுள்ளது. (ஓ-6)

# ஈழத்தமிழருக்காக அனைத்து தமிழர்களும் — குரல் கொடுக்க முன்வரவில்லை —

## நடிகர் சத்யராஜ் வேதனை

"பக்கத்து வீடு பற்றி எரியும் போது பார்த்துக்கொண்டிருக்கலாமா? நம் சொந்தங்கள் செத்து மடியும் போது குரல் கொடுக்கக்கூட யோசித்துக் கொண்டிருக்கலாமா?" என்று நடிகர் சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

கவிஞர் பா. விஜய் நாயகனாக நடிக்கும் 'ஞாபகங்கள்' படத்தின் பாடல் வெளியீட்டு விழா சென்னை ஏவி. எம். ஸ்டுடியோவில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

இவ்விழாவில் நடிகர் சத்யராஜ் வந்ததுமே அனைவரின் கவனமும் அவர் மீது தான் இருந்தது.

அதற்குக் காரணம், அவர் அணிந்திருந்த கறுப்பு ரீ–சேர்ட்டில் "ஈழத்திற்காக குரல் கொடுப்போம்" என்று ஆங்கில வாசகம் அச்சிடப்பட்டிருந்ததுதான்.

சத்யராஜ் பேசும் போது அனைவரின் கவனமும் அவர் மீது தான் இருந்தது.

நான் இந்த மேடையை ஒரு நல்ல விடயத்திற்காக பயன்படுத்திக் கொள்கிறேன். ஈழ விடயத்திற்காகத்தான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

தேர்தலுக்காக யார் வேண்டுமானாலும் யாருடனாவது கூட்டணி வைத்துக் கொள்ளட்டும். ஆனால் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஒன்றுபடட்டும். ஒருமித்த குரல் எழுப்ப வேண்டுகிறேன்.

வெளிநாடுகளில் எத்தனை தமிழர்கள் இருக்கிறார்களோ அத்துணை தமிழர்களும் ஈழ ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

ஆனால் தாய் தமிழகத்தில் எத்துணை தமிழர்கள் கலந்து கொள்கிறார்கள் இதுதான் வேதனை. ஈழத்தமிழர்களுக்காக அனைத்து தமிழர்களும் குரல் கொடுக்க முன்வரவில்லை.

பக்கத்து வீடு பற்றி எரியும் போது பார்த்துக் கொண்டிருக்கலாமா? நம் சொந்தங்கள் செத்து மடியும் போது குரல் கொடுக்கக் கூட யோசித்துக் கொண்டிருக்கலாமா?" என்று ஆவேசப்பட்டார். (ஓ-6)

# பாகிஸ்தானில் தற்கொலை குண்டு தாக்குதலில் 16 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இடம் பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 10 பொலிஸார் உட்பட 16பேர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் வட மேற்கு பிராந்தியத்தில் உள்ள சார்சடா என்ற இடத்தில் பொலிஸ் சோதனைச் சாவடி உள்ளது. அதில் 10க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த லொறியொன்றை பொலிஸார் மடக்கி சோதனையிட முயன்றனர். அந்த லொறியை வெடி குண்டுகளை நிரப்பி தீவிரவாதி ஒருவன் ஓட்டி வந்துள்ளான்.

பொலிஸார் அருகே நெருங்கி சோதனையிட வந்ததும் குண்டை வெடிக்க செய்தான்.

அதில் சிக்கி 10 பொலிஸார் மற்றும் பொது மக்கள் 6 பேர் பலியானார்கள் 22 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் ஆதிக்கம் அதிகமாகவுள்ளது.

அவர்கள் தான் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

பாகிஸ்தானில் கடந்த 5 ஆம் திகதி நடந்த மனித வெடி குண்டு தாக்குதலில் 30 பேர் பலியானார்கள் இந்த தாக்குதல் நடந்த 10 நாட்களில் மீண்டும் இந்த கொடூர தாக்குதல் நடந்துள்ளது. (ஓ-6)

# மலிவான சூரியசக்தி அடுப்புக்கு 75ஆயிரம் அமெரிக்க டொலர் பரிசு

உலக சுற்றுச் சூழல் நட்புறவு தயாரிப்புகள் போட்டியில் மிகவும் மலிவான சூரிய சக்தி அடுப்பொன்று வெற்றி பெற்று முதல் பரிசான 75 ஆயிரம் அமெரிக்க டொலரை சுவீகரித்துள்ளது.

மரப்பலகையைப் பயன்படுத்தி பெட்டி வடிவில் அமைக்கப்பட்ட இந்த சூரியசக்தி அடுப்பை கென்யாவைச் சேர்ந்த ஜோன் ஹொஹ்மர் என்பவர் உருவாக்கியுள்ளார்.

'பெறாம்போர் த பியூச்சர்' என்ற தொண்டு ஸ்தாபனத்தால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற இந்த அடுப்பை தயாரித்து சந்தைப் படுத்தும் பொறுப்பை நைரோபியிலுள்ள தொழிற்சாலையொன்று ஏற்றுள்ளது.

இதை தயாரிப்பதற்கான செலவு 5



அமெரிக்க டொலர் மட்டுமேயாகும். (ஓ-6)

# கடற் கொள்ளையர் 11 பேர் கைது

(அல்லுமர்)

சுயெஸ் கால்வாய் வழியாக பயணம் செய்யும் கப்பல்களை சோமாலியா கடற் கொள்ளையர்கள் கடத்தி பணம் பறித்தி வருகின்றனர்.

இவர்களை ஒடுக்க இந்தியா உட்பட பல நாடுகள் தங்கள் நாட்டு போர்க் கப்பல்களை அந்தப் பகுதியில் நிறுத்தியுள்ளனர்.

இதேபோல் அங்கு நிறுத்தப்பட்டிருந்த பிரெஞ்சு போர்க் கப்பல் ஒன்று கடற் கொள்ளையர்களை சுற்றி வளைத்ததில் படகில் சென்ற 11 கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டனர். (ஓ-6)

# ஒசாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமெரிக்கா முன்னுதாரணத்தை காண்பித்தால் புலிகளுடன் பேசத் தயார்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக துரோகமிழைத்த நாடு நோர்வேயாகும். இன்றும் அந்த துரோகத்தை அந்த நாடு முன்னெடுக்கின்றது. ஆனால் தற்போதைய சூழலில் அந்த நாட்டுடனான இராஜதந்திர உறவுகளை கைவிட வேண்டுமென்ற கோரிக்கை உசிதமானதல்ல. ஒசாமா பின்லேடனுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி அமெரிக்கா முன்னுதாரணத்தை காட்டினால் புலிகளுடன் பேச நாமும் தயார் என்று அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தெரிவிக்கின்றது.

நோர்வேயிலுள்ள இலங்கை தூதரகம் மீதான தாக்குதல் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பான செயலாளர் நரேந்திர குணதிலக மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது இத் தாக்குதல் சம்பவத்தை கடுமையாக கண்டிக்கின்றோம். இதற்கு நோர்வேயின் அதிகாரத்தில் உள்ளோரினதும் ஆசீர்வாதங்கள் கிடைத்திருக்குமென்றே நினைக்கின்றோம்.

இன்று நேற்றல்ல பல தசாப்த காலங்களாக இலங்கைக்கு துரோகமிழைத்த எதிரி நாடுதான் நோர்வேயாகும்.

இதனை அன்றே ஹெல உறுமய தெரிவித்தது. அப்போது அந்த நாட்டுடன் இராஜதந்திர உறவுகளை கைவிட்டிருக்க வேண்டும்.

இலங்கைக்கு எதிராக மெக்சிக்கோவை பயன்படுத்தி சட்ட மூலத்தைக் கொண்டு வர நோர்வே முயற்சிக்கின்றது. ஆனால் சீனாவின் வீட்டோ அதிகாரத்தால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

ஆனால் இப் பிரயத்தனத்தை நோர்வே உட்பட மேற்குலக நாடுகள் கைவிடவில்லை தொடர்ந்து கொண்டுள்ளன.

இவ்வாறானதோர் சர்வதேச சூழ்நிலை உருவாகியிருக்கும் நிலையில் நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளை நாம் முறித்துக் கொள்வோமானால் பாதகமான சில நிலைமைகள் உருவாகும். எனவே சூட்சுமமான இராஜதந்திர அணுகு முறைகளை கையாள வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இதனால் மக்கள் மத்தியில் பிரபல்யம் டைவதற்கான கருத்துக்களை வெளியிடாது, உணர்ச்சி வசப்படாது தீர்க்க தரிசனமான தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.

யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஐ.நா. அமெரிக்கா உட்பட பல நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த நாடுகள் ஒசாமா பின்லேடனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி எமக்கு முன்னுதாரணத்தை காட்டினால் நாமும் பேச்சுக்குத் தயார் என்றார். (ஓ-6)

# பிரதமரின் நெருங்கிய நண்பரெனக் கூறி பொதுமக்களிடம் மூன்றரை கோடி ரூபா பணத்தை பெற்ற நபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பிரதமரின் நெருங்கிய நண்பன் எனக் கூறி இத்தாலி நாட்டில் தொழில் பெற்றுத் தருவதாக வாக்களித்து பொதுமக்களிடமிருந்து மூன்றரைக் கோடி ரூபாவை பெற்றுக் கொண்டு அவர்களை ஏமாற்றிய நபரொருவரை கைது செய்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.கே.சீ.பீ. தயாவங்க தெரிவித்தார்.

அத்துடன் இச்சம்பவங்களுடன் நேரடித் தொடர்புடைய குறித்த சந்தேக நபரின் மனைவி மற்றும் வாகனச் சாரதி ஆகியோரையும் கைது செய்துள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பிரதமரின் நெருங்கிய நண்பன் எனக் கூறிய குறித்த நபர், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஆடம்பர வீடுகளைக் கூலிக்குப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் நவீன வாகனங்கள் பலவற்றையும் பாவித்து வந்துள்ளார்;

பிரதமரின் உதவியுடன் மிக இலகுவாக இத்தாலி நாட்டில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறியே 80க்கும் மேற்பட்டவர்களை ஏமாற்றி ஒவ்வொருவரிடமிருந்தும் நான்கு இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை முற்பணமாகப் பெற்றுள்ளார்.

இந் நபர் குறித்து நாட்டிலுள்ள பல பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் பொலிஸ் அதிகாரிகள் பலரும் இவரால் இவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

தமது பணத்தைக் கொடுத்து ஏமாற்றமடைந்து காத்திருந்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் முயற்சியின் பயனாகவே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொட பகுதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இவர் அண்மைக் காலமாக அநுராதபுர நகரத்தில் பிரபல அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் வாடகைக்கு வசித்து வருவதாகவும் நகரிலுள்ள தனியார் வாகன விற்பனை நிலையம் ஒன்றில் நவீன வாகனமொன்றைப் பெற்று பாவித்து வந்துள்ளதாகவும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# மாணவர் நலன் கருதி செயற்பாடுகள்

வவுனியா நலன்புரி முகாம்களில் உள்ள க.பொ.த உயர்தர மாணவர்களின் நலன் கருதி அவர்களையும் அவர்களுக்கான ஆசிரியர்களையும் ஒரே இடத்தில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பொருட்டு கணித மற்றும் விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான ஆசிரியர்களை வவுனியா கதிர்காமர் முகாமில் தங்கவைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான திட்ட அறிக்கையொன்று மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரும் நாடுகளில் இலங்கை இரண்டாம் நிலையில்

(கொழும்பு)

இந்த வருடத்தில் அதிகளவான இலங்கையர்கள் சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளதாக அந்நாட்டு மத்திய குடி வரவுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவிற்சர்லாந்தின் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாவது நிலையில் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எரித்திரியாவிலிருந்து 782 விண்ணப்பங்களும் இலங்கையிலிருந்து 454 விண்ணப்பங்களும் நைஜீரியாவிலிருந்து 431 விண்ணப்பங்களும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை அகதி அந்தஸ்து குறித்த சட்ட விதிகள் கடுமையாக்கப்பட வேண்டுமென சுவிற்சர்லாந்து நீதியமைச்சினால் முன் வைக்கப்பட்டுள்ள யோசனைத் திட்டம் தொடர்பில் தற்போது விவாதம் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் அகதி அந்தஸ்து கோரியோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுவிற்சர்லாந்தின் மத்திய குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.


கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது இந்த வருடத்தில் குறைந்தளவானோரே அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

சொலிலக்ஸ்
பல் மூக்குக் கண்ணாடியகம்
ஆம் நற்பொழுது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (O.P.D முன்பாக) நவீன காட்சி அறையுடன் தமது சேவையை ஆரம்பித்துள்ளார்கள்.
கண் பரிசோதித்து நவீன பிரேம்களில் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும் கால நிலைக்கு ஏற்ப கலர் மாறக் கூடிய சன்கிளாஸ் வகைகளை நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் இவ்வர கொம்பியூட்டர் கண் பரிசோதனைகளும் மிகச் சிறந்த வகையான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும் மிகப்புப் பற்களுக்கு
ரிம்லெஸ் (RimLess) கண்ணாடிகளையும் கணனி பாவனையாளர்களுக்கு ஏற்றால் போல் ஒளி எதிர்ப்பு கண்ணாடிகளை (multi coated) பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
இல.516, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C/2350) T.P.021 222 7631

# புத்தாண்டில் உங்கள் சித்திரை மாதப் பலன்

**"ஜோதிடக் கலைமாமணி" சிவல்புரி சிங்காரம்**

## மகரம்



**உத்திராடம் 2,3, 4 பாதங்கள், திருவோணம், அவிட் டம் 1,2 பாதம் வரை**

**முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தை எந்நாளும் சிந்தித்துக்கொண்டிருக்கும் மகர ராசி நேயர்களே !**

சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்துச் சனி வக்ரத்தோடு தொடங்குகிறார். ஜென்ம குரு சிறப்போடு உலா வருகிறார். பாக்யாதிபதியும் வக்ரம் பெறுகிறார். எனவே, தொடக்கத்தில் மனக் குழப்பங்களும், இரட்டித்த சிந்தனையும் உருவாகும். தொகையும் செலவாகிறதே என்ற கவலை மேலோங்கும் .வழிபாடுகளை முறையாக மேற்கொண்டு வருத்தத்தை போக்கிக்கொள்வது நல்லது.

மாதத்தின் மையப் பகுதியில் கும்பத்தில் குரு அதிசாரமாக செல்வதால் அதன் பிறகு ஓரளவு மனக்குழப்பங்கள் அகலும் பணப் புழக்கங்கள் அதிகரிக்கும். செவ்வாய் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உடன் பிறப்புகள் உதவிக் கரம் நீட்டுவர். சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகல பஞ்சாயத்துக்கள் மூலம் முடிவெடுப்பீர்கள்.

மாதத்தின் தொடக்கத்தில் புத -ஆதித்ய யோகம் இருப்பதால் ஆதாயம் கிட்டும் விதத்தில் மாமன் மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிட்டும். ஜென்ம ராகு உடல் நிலையில் சிறு சிறு தொல்லைகளைக் கொடுக்கலாம். அப்போதைக்கு அப்போது மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது நல்லது. கேது பலத்தால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தும்பிக்கையான் வழிபாடு உங்கள் நம்பிக்கைகளை நிறைவேற்றும்.

உங்கள் ராசிக்கு 5,10க்கும் அதிபதியான சுக்ரன் ஏப்ரல் 14ஆம் திகதி முதல் ஏப்ரல் 21ஆம் திகதி வரை மீன ராசியில் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக பிள்ளைகள் வழியில் சில தொல்லைகளைச் சந்திக்க நேரிடும். தொழில் துறையில் திருப்தி ஏற்படாது ஒரு செயலைச் செய்து விட்டு பிறகு ஆஹா இப்படி செய்து விட்டோமே என்று வருத்தப் படுவீர்கள் உத்யோகத்தில் உயரதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. வளர்ச்சிப் பாதையில் வரும் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றுவது வழிபாடுகள் தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள் சுக்ர வழிபாடு சுகத்தை வழங்கும்.

மே 1ஆம் திக்தி கும்ப ராசியில் குரு அதிசாரத்தில் செல்கிறார். இதன் விளைவாக, மனக்குழப்பம் அகலும் மதிப்பும்,மரியாதையும் உயரும்.அதன் பார்வை பலத்தால் எதிரிகள் நண்பர்களாக மாறுவர். இல்லத்தில் உள்ளவர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். கடன் சுமை குறையும். கருத்து வேறுபாடுகள் முழுமையாக அகல சனி விலகும். வரை பொறுத்திருக்க வேண்டும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். அதிசாரமாகச் சென்றாலும் அதன் பார்வை பலத்தால் சென்ற மாதத்தில் பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும் ஆரோக்கியமும் சீராக மாற்று மருத்துவம் கைகொடுக்கும்.

இம்மாதம் முழுவதும் அஷ்டமத்தில் சனி வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். அதன் விளைவாக எதையும் யோசித்து முடிவெடுப்பது நல்லது. பெரியோர்களின் ஆலோசனைப்படி நடந்தால் பெருமை சேரும்.சனி வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.காக வாகனத்தான் துணையிருந்தால் தேக நலன் சீராகும்.

## கும்பம்



**அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் வரை**

**கற்ற கல்வியைக் காட்டிலும் பெற்ற அனுபவத்தின் மூலம் பெருமையைக் காணும் கும்ப ராசி நேயர்களே !**

சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சனியின் வக்ர இயக்கம் மேலோங்கி இருக்கிறது. எனவே அதன் பார்வை பலத்தால் மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். உழைப்புக்கேற்ற பலன் கிடைப்பது அரிது. உடல் நிலையிலும் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். உணவு கட்டுப் பாட்டினால் ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ள இயலும்.

சுகஸ்தானாதிபதி தன ஸ்தானத்தில் வக்ரம் பெறுகிறார். எனவே பயணங்கள் அதிகரிக்கும். எதையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்ய இயலாது. பெண் வழி பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். மாத தொடக்க நாளில் ஆறுக்கு அதிபதி நீச்சம் பெறுவதால் கடன் சுமை குறைய புதிய வழி பிறக்கும். எதிரிகள் மனமாற்றம் அடைவர் விரய குருவின் ஆதிக்கத்தால் சுப விரயங்கள் ஏற்படும்.

அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் ஆர்வம் காட்டும் மாதமிது. ராசிநாதன் வலு விழக்கும் நேரத்தில் வழிபாடுகளை மேற்கொண்டால் சிக்கல்களிலிருந்தும் சிரமங்களிலிருந்தும் விடுபட இயலும். அந்த அடிப்படையில் எள் தீபம் ஏற்றி சனீஸ்வரனை முறையாக வழிபட்டால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

4, 9க்கு அதிபதியான சுக்ரன் ஏப்ரல் 14ஆம் திகதி முதல் ஏப்ரல் 21ஆம் திகதி வரை மீனத்தில் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழியில் உள்ள பிரியம் குறையலாம். உற்றார், உறவினர்களின் பகை உருவாகலாம். அழகுப் பொருட்கள், ஆபரணங்கள் வாங்கியவற்றைக் கூட ஒரு சிலர் விற்க நேரிடலாம் . வங்கிச் சேமிப்பு கரையும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். கொடுக்கல் ,வாங்கல்களின் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. தந்தை வழி சொத்துக்களை பஞ்சாயத்துக்கள் மூலம் தீர்த்துக்கொள்வது நல்லது. பெண் தெய்வ வழிபாட்டின் மூலம் உங்கள் பிரச்சினைகள் தீர வழி பிறக்கும்.

மே 1 ஆம் திகதி முதல் உங்கள் ராசியிலேயே குரு அதிசாரமாக சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மனம் மகிழ்ச்சி தரும் சம்பவமும் நடைபெறும். மனக்கசப்பு தரும் சம்பவங்களும் ஒரு சில நடைபெறலாம். வக்ரச் சனியை குரு பார்த்து அதன் கடுமையை குறைத்தாலும் ஜென்ம குருவாக இருப்பதால் எந்த முடிவையும் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடலாம். குரு வழிபாடு உங்களுக்கு குதூகலத்தை வழங்கும்.

இம் மாதம் முழுவதும் சனி வக்ர கதியில் இயங்குகிறார். இதன் விளைவாக இனம் புரியாத கவலை மேலோங்கும். எடுத்த முடிவை திடீர் திடீரென மாற்றிக்கொள்வீர்கள். பணப் புழக்கம் அதிகரித்தாலும் நிம்மதி இருக்காது . பக்குவமாக பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

இம் மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்க பிரதோஷ நாளில் நந்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள் பௌர்ணமி நாளில் மலை வலம் வந்து மகத்துவம் காணலாம்.

## மீனம்



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்ரட்டாதி, ரேவதி முடிய**

**விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்களாக விளங்கும் மீன ராசி நேயர்களே !**

சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாத தொடக்கத்தில் ராசிநாதன் குரு நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். லாபத்திற்கும், விரயத்திற்கும் அதிபதியான சனி வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய மாதமாக இம் மாதம் அமைகிறது சொல்லை செயலாக்கிக் காட்டுவதில் சில தடைகள் ஏற்படலாம்.

சுகங்களையும், சந்தோஷங்களையும் தக்க வைத்துக்கொள்ள பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும். இருப்பினும் மாத தொடக்கத்திலேயே தனாதிபதி செவ்வாய் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பதால் யாருடைய பணமாவது உங்கள் கைகளில் புரண்டு கொண்டேயிருக்கும். புத-ஆதித்ய யோகம் இருப்பதால் மாமன் , மைத்துனர் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும் .அரசு வழிச் சலுகைகளும் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

அரசியல்வாதிகளாலும் நன்மை கிடைக்கும் மாதமிது. கட்டடப் பணிக்கும், கடல் தாண்டும் பணிக்கும் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு திட்டமிட்டபடியே காரியங்கள் நடைபெறும். தெய்வ தரிசனங்களும் , தீர்த்த யாத்திரைகளும் உங்களுக்கு வந்து சேரும்.


சுக்கிரனின் வக்ர இயக்கத்தால் சில நல்ல மாற்றங்களைக் காணப்போகிறீர்கள் 3 , 8க்கும் அதிபதி வக்ரம் பெறுவதால் உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் இழப்புக்களை ஈடு செய்யும் விதத்தில் ஏதேனும் ஒரு தொகை வந்து கொண்டேயிருக்கும் அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு கிட்டும். இடம்,பூமியாலும் லாபம் கிடைக்கும் இது வரை வைத்தியம் பார்த்தும் குணமாகாத நோய்கள் இப்பொழுது எளிய வைத்திய முறையால் குணமாகும். விலகிச் சென்ற பங்குதாரர்கள் விரும்பி வந்து சேர்வர். பங்காளிகள் பகைமாறும். இக்காலத்தில் அம்பிகையை வழிபட்டால் ஆச்சர்யப்படத்தக்க வாழ்வு அமையும்.

மே 1ஆம் திகதி கும்ப ராசியில் குரு அதிசாரமாக செல்ல இருக்கிறார். இதன் விளைவாக விஷயங்கள் கூடலாம்.திடீர் ஊர்மாற்றங்கள், இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்துசேரும்.கடல் பயண வாய்ப்புகள் வந்து சேரும். சுய ஜாதகத்தில் குருவின் பல மறிந்து அதற்கேற்ப வழிபாடுகளையும் மேற்கொண்டால் வரவு வருவதில் இருந்த சிக்கல் மாறும் வழக்குகளிலும் வெற்றி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத் திட முன்வரும் பொழுது யோசித்துச் செய்வது நல்லது. பங்குதாரர்கள் திடீரென மனம் மாறலாம்.

லாபாதிபதி சனி வக்ரமடையும் பொழுது எதிர்பார்த்த லாபத்தைக் காண இயலாது. இம்மாதம் முழுவதும் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் அதிக உழைப்பும் அலைச்சலும் உருவாகலாம். நண்பர்களை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைத்தால் அது உங்களிடமே திரும்பி வரும். சங்கிலித் தொடர் போல கடன் சுமை அமையலாம். வாங்கல் கொடுக்கல்களில் விழிப்புணர்ச்சி காட்டினால் மன அமைதி குறைவு ஏற்படாது . சனி வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

இம்மாதம் குருவின் பார்வையைப் பலப்படுத்த வியாழன் தோறும் சுண்டல் நைவேத்யமிட்டு தெட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள் குருவைவழிபட்டால் குதூகலம் வந்து சேரும். (முற்றும்)





அகில இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கம் மற்றும் யாழ். மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் உடுவில் மகளிர் கல்லூரியினால் நடத்தப்பட்ட 15 வயதுப்பிரிவினருக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம், இரண்டாம் இடத்தைப்பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகளை முதலாவது படத்திலும், மூன்றாம் இடம்பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி அணியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். அருகில் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் அகிலதாஸ், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிராணி மில்ஸ், விளையாட்டுதுறைத் பொறுப்பாசிரியர் ப.தர்மகுமாரன் ஆகியோர் காணப்படுகின்றனர். (படங்கள்:-கோபி)

ஏறமுடியாத மரத்தை –சும்மா வெறுத்துப் பார்த்துக் கொண்டிராதே!

– கொரியா

## வலம்புரி

## தமிழ்க் கூட்டமைப்பு இந்தியாவுடன் எதைப் பேசப்போகிறது!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவுக்குச் சென்று பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

நேற்றைய தினம் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனனுடனும் கூட்டமைப்பினர் பேசியுள்ளனர்.

என்ன பேசினார்கள் என்பது பற்றி எதுவும் வெளிவரவில்லையாயினும் அவர்கள் பேச வேண்டிய பல விடயங்கள் உண்டு.

இதில் முக்கியமான விடயங்கள் முன்கூட்டியே இந்தியாவுடன் பேசப்பட்டிருக்க வேண்டியவை. எனினும் துரதிர்ஷ்டவசமாக போர் உச்சமடைந்து ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகி –எல்லாம் இழந்த நிலையில் நடக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை பேசவருமாறு இந்திய மத்திய அரசு அழைத்ததன் பேரில் இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது.

இருந்தும் இந்திய மத்திய அரசின் அழைப்பை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்கள் கூட்டமைப்பிற்குள் நடந்ததாகவும், இறுதியில் சந்திப்பதென முடிவெடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், இந்திய மத்திய அரசுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் என்ன விடயங்கள் குறித்து பேசுவார்கள் என்பது பற்றிய வினா தமிழ் மக்களிடையே எழுவது நியாயமானது.

ஏனெனில் இந்தியாவுடனான சந்திப்பில் இரண்டு வகையான சம்பாஷணை இடம்பெற முடியும்.

அதில் ஒன்று கோரிக்கைகளை முன்வைத்தல். மற்றையது எதற்காக இப்படிச் செய்தீர்கள் எனக் கேள்வி எழுப்புவது. இதில் கோரிக்கைகளை முன்வைத்தல் என்பதில்

★ யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துதல்
★ போர்க்களத்தில் சிக்கியுள்ள மக்களைப் பாதுகாத்தல்
★ நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை மீளக் குடியமர்த்தல்

உள்ளிட்ட விடயங்களை முன்வைக்க வேண்டும்.

மாறாக நடைபெறும் யுத்தத்தில் இந்தியப் படைகள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

★ ஆயுத உதவி மற்றும் பயிற்சிகள் இலங்கை இராணுவத்திற்கு இந்தியா வழங்கியுள்ளது.
★ ராடர் கருவிகளை வழங்கியதுடன் அதனை இயக்குபவர்களையும் இந்தியாவே வழங்கியுள்ளது. ஒட்டுமொத்தத்தில் வன்னி யுத்தத்தின் பின்புலம் இந்தியாவே.

இவ்வாறு பின்புலமாக நின்று தமிழ் மக்களை எதற்காக பலியெடுத்தீர்கள் என்று முகத்தில் அடித்தாற்போல் கேட்பது.

இதில் கூட்டமைப்பு எதனைக் கேட்கப் போகிறது?

# இனப்பிரச்சினையைத் தீர்க்கும் திறமை நோர்வேயிடம் இல்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உதவிகளைச் செய்யும் திறமை நோர்வேயிடம் இல்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. நோர்வேயின் இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்துள்ளபோதிலும் சர்வதேச சமூகத்தில் தம்மை அனுசரணையாளர்களாக காண்பிப்பதற்கு நோர்வே முயற்சிப்பதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் ஈடுபடுவதற்கு நோர்வே சுதந்திரமாக இடமளித்திருப்பதால் அந்த நாட்டின் மீது இலங்கை கொண்டிருந்த நம்பிக்கை இழக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் தமது நாட்டில் உள்ள இலங் கைத் தூதரகத்திற்கு பாதுகாப்பு வழங்காத ஒரு நாட்டிடம் இருந்து என்ன வகையிலான உதவிகளை எதிர்பார்க்க முடி யும் என கேள்வி எழுப்பினார். விடுதலைப்புலிகள் தொடர்பாகவும் தமது நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறித்தும் நோர்வே மெத்தனப்போக்கை கடைப்பிடிக்கின்றது. மோதல்களுக்கு நிதி சேகரிப்பதற்கும் மேலாக இலங்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் பிரசாரங்களையும் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் அங்கு நடத்துகின்றனர்.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிப்பதுடன் விடுதலைப்புலிகளுக்கு வாழ்வளித்துக்கொண்டு போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படவேண்டும் என நோர்வே இலங்கையை வலியுறுத்துகிறது. என அமைச்சர் தெரிவித்தார்.

பொதுமக்களை விடுவித்து இலங்கை அரசாங்கப்படைகளிடம் சரணடையவேண்டும் என விடுதலைப்புலிகளை வலியுறுத்துவதையே நோர்வே தற்பொழுது செய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (ஓ–6)

# இலங்கையில் நிரந்தர போர் நிறுத்தத்தை வலியுறுத்தி சென்னையில் பெண்கள் சாகும் வரை உண்ணா விரதம்

(சென்னை)

இலங்கையில் உடனே நிரந்தரமாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சென்னையில் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த பெண்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் குழந்தைகள் கொடூரமாக கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதனால் இலங்கையில் நிரந்தரமாக போர் நிறுத்தம் செய்வதற்கு மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு அமைப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் இலங்கையில் நடைபெறும் கொடுமைகளை பார்த்து அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள் முடிபு செய்தனர். சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க 20 பெண்கள் முன் வந்தனர்.

அதன்படி கன்னியாகுமரி, மதுரைதேனி, திண்டுக்கல், கரூர், திருச்சி உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் கடந்த 13ஆம் திகதி சென்னை வந்தனர். இலங்கை தமிழர் பிரச்சினைக்காக தீக்குளித்து உயிர் நீத்த முத்துக்குமாரின் உடல் வைக்கப்பட்டிருந்த சென்னை –கொளத்தூர் வியாபாரிகள் சங்க கட்டடத்திற்கு அவர்கள் வந்தனர். அந்த இடத்திலே 20 பெண்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார்கள் நூற்றுக்கணக்கான பெண்கள் தொடர் உண்ணா விரதத்திலும் ஈடுபட்டனர்.

இரண்டாவது நாள் கொளத்தூரில் வேறொரு இடத்தில் சாகும் வரை உண்ணா விரதம் மேற்கொண்டனர். சென்னை மாநகரின் இதர பகுதிகளில் இந்தப் போராட்டத்தை தொடர திட்டமிட்டார்கள் .

கடைசியாக ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகத்தில் உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்தனர். அற்கு நேற்று முன்தினம் 3ஆவது நாளாக பெண்கள் சாகும் வரை உண்ணாவிரதபோராட்டம் நடத்தினார்கள். இந்த உண்ணா விரதம் நீடித்தால் பலரது நிலைமை கவலைக்கிடமாகும் அபாயம் உள்ளது.

இலங்கை பிரச்சினைக்காக சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களை புதிய தமிழகம் கட்சி நிறுவன தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி சந்தித்து வாழ்த்தும் ஆதரவும் தெரிவித்தார். (ஓ–6)

# எலிக்காய்ச்சல் நோயினால் இலங்கை பெரும் பாதிப்பு

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

(கொழும்பு)

எலிக்காய்ச்சல் நோயினால் இலங்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

எலிக்காய்ச்சல் நோயினால் அதிகளவு உயிரிழப்புகள் ஏற்படும் நாடுகளில் இலங்கை முதலிடம் வகிப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

கடந்த 2008ஆம் ஆண்டில் மட்டும் எலிக்காய்ச்சல் நோயினால் சுமார் 200பேர் உயிரிழந்துள்ளதுடன் 6 ஆயிரம் பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கொழும்பு கம்பஹா கண்டி இரத்தினபுரி மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் எலிக்காய்ச்சல் நோய் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாக அந்தத் தாபனம் மேலும் குறிப்பிடப்படுகிறது. (ஓ–6)

# வெள்ளி நற்சிந்தனை 67

## பக்தியின் மொழி தமிழ்

எமது கண்ணில் தோன்றும் காட்சிகள் எமக்கு பல்வேறு உந்துதல்களைத் தரும். எமது பார்வை படும் இடங்களில் எம்மை பரவசப்படுத்தும் காட்சிகள் இருப்பின் அதை மீண்டும் மீண்டும் சென்று பார்க்கும் ஆவல் உண்டாகும். மனிதனுடைய உடல் உறுப்புகளில் செவி, கண், நா என்னும் மூன்றும் மிகவும் இன்றியமையாதவை. செவி எல்லா விதமான ஒலிகளையும் அவற்றின் வேறுபாடுகளையும் துல்லியமாக உணர்த்தும் பொறுப்பை செய்கிறது. கண் எம்மைச் சூழ உள்ளவற்றை தெளிவாக நாம் காண்பதற்கு துணையாகவுள்ளது. நா எமக்கு இரு வகையில் உதவுகிறது. சுவைகளைப் பகுத்து அறிவதற்கும் சொற்களால் எமது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் துணையாகவுள்ளது.

எனவே தொழில் நுட்ப நிலையில் செவி, கண், நா என்னும் மூன்று பொறிகளும் தகவல் தொழில் நுட்ப அறிவை எமக்கு ஊட்டும் சாதனங்களாக விளங்குகின்றன. எம்மைச் சுற்றியுள்ள சூழ் நிலையில் உள்ள ஒலிகளை அறிந்து அவற்றை வெளிப்படுத்தும் மூலங்களை பார்வையால் கண்டறிந்து அவை பற்றிய கருத்தை எடுத்துரைப்பதற்கு மூன்று பொறிகளும் ஒருங்கிணைந்த தொழிற்பட வேண்டும். இப்பொறிகளின் இயக்கத்தால் மனிதன் தன்னை சூழ உள்ளவர்களோடு தொடர்பாடல் கொண்டு வாழ்கிறான்.

இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் நவீன கருவிகளின் ஆக்கமும் மின் வலுவும் இணைந்து மனிதன் தொடர்பாடலைச் செய்வதற்கு முன்னிற்கின்றன.தகவல் தொழில் நுட்பமும் தொடர்பாடலும் புதிய கற்கைநெறிகளாக உலகெங்கும் சிறப்புறுத்திப் பேசப்படுகின்றன.

ஆனால் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமது நாயன்மார் இது பற்றிய அறிவை மக்களுடன் எடுத்துரைத்துள்ளனர். மனிதனுக்கு இயற்கை வழங்கியுள்ள பொறிகளினால் அவன் இப்பணியை ஆற்றலாம் என உணர்த்தியுள்ளனர். இயற்கையோடு இயைந்த இறைவழிபாட்டில் இப்பொறிகளின் தொழில்பாட்டை எடுத்துரைத்து மனிதனின்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மொழியாற்றலையும் தகவல் தொடர்பாடல் அறிவையும் பெறுவதற்கு வழி கூறியுள்ளார். இது சிறப்பானதொரு கற்கை நெறியாக விளங்கியுள்ளது.

திருந்து தேவன்குடி யென்னும் கோயிலில் வீற்றிருக்கும் அருட்கோலத்து இறைவனை வழிபாடு செய்யும் போது செவியும், கண்ணும் , நாவும் ஒன்றிணைந்து தொடர்பாடல் செய்வதையும் மொழி ஆற்றல் அதை கவிதையாக வெளிப்படுத்துவதையும் திருஞானசம்பந்தர் தனது தேவாரத்தில் பதிவு செய்துள்ளார். அவருடைய அன்றைய வழிகாட்டல் பொதுமக்கள் அனைவரையும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடலில் வல்லவராக ஆற்றுப்படுத்துகிறது.

“செவிகளார்விப்பன சிந்தையுட் சேர்வன
கவிகள் பாடுவன கண் குளிர்விப்பன
புவிகள் பொங்கப் புனல் பாயும் தேவன்குடி
ஆவிகளுய்க்கப்படும் அடிகள் வேடங்களே”

# போராட்டங்களில் ஈடுபடும் புலம் பெயர் தமிழர்கள் உறவுகளின் துயர் துடைக்க உண்ணாநிலை

வன்னிப்பகுதியில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் இனப்படுகொலையைக் கண்டித்து அனைத்துலக நாடுகளில் முழு வீச்சில் நடத்தப்படும் சாகும் வரையான உண்ணா நிலைப்போராட்டங்கள் உணர்வு பூர்வமான நிலையை அடைந்துள்ளன.

### பிரித்தானியாவில்

பிரித்தானியாவில் நடைபெற்றுவரும்



போராட்டத்தில் நேற்று 10ஆவது நாளாக சாகும் வரை உண்ணா நிலை இருக்கும் சுப்பிரமணியம் பரமேஸ்வரனின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதால் அங்கு ஒருவித அச்ச உணர்வு மக்கள் மத்தியில் எழுந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தப்படும் இடத்திற்கு இரவு பகலாக சென்று கொண்டிருக் கின்றனர்.

உண்ணா நிலை இருக்கும் சுப்பிரமணி யன் பரமேஸ்வரனை கைகூப்பி வணங்கி கண்ணீர் மல்க அவர்கள் பார்வையிட்டு வரு கின்றனர்.

சிறியோர் தொடக்கம் முதியோர் வரை வயது வேறுபாடின்றி இரவு பகல் பாராது மேற்படி போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.



அதே நேரம் மருத்துவக் குழுவினர் சுப் பிரமணியம் பரமேஸ்வரனின் அருகே இருந்தவாறு அவரது உடல் நிலையைப் பரிசோதித்து வருவதுடன் தமது கவலையையும் வெளியிட்டுள்ளனர்.

### கனடாவில்

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் உள்ள நாடாளுமன்ற முன்றலில் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் தமிழர்கள் முன்னெடுத்துவரும் கவனயீர்ப்பு முற்றுகைப் போராட்டம் 8ஆவது நாளாக தொடர்ந்தும் மக்கள் எழுச்சியுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் இத்தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் 6 தமிழர்களால் தொடரப்படும். சாகும் வரையிலான உண்ணா நிலைப் போராட்டம் 7ஆவது நாளாக நடைபெறுகின்றது.

இதில் ஜோகேந்திரன் (54), சிவனேஸ்வரி (59) துளசிகாமணி (74), ஜூலியஸ் ஜேம்ஸ் (34), புஸ்பராஜா மணி (46), தையல் நாயகி (67), ஆகியோரே உண்ணா நிலைப்போராட்டத்தினை நடத்தி வருகின்றனர். இவர்களில் ஜூலியஸ்ஜேம்சின் உடல் நிலை பாதிக்கப்பட்டதால் அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் தன்னுடைய உண்ணா நிலைப் போராட்டத்தை கைவிடப்போவதில்லை என அவர் தெரிவித்திருக்கின்றார்.


ரொரன்ரோ, ஒட்டாவா, மொன்றியல் ஆகிய கனடிய பெரு நகரங்களில் இருந்து மக்கள் பெருமளவில் இப்போராட்டத்திற்கு வந்து செல்கின்றனர்.

### அவுஸ்திரேலியாவில்

நான்கம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சிட்னி, மெல்போன் ஆகிய நகரங்களில் உண்ணா நிலைப்போராட்டத்தைத் தொடங்கிய 6 தமிழ் இளைஞர்கள் அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பராவுக்கு தமது போராட்டத்தை நகர்த்தியிருக்கின்றனர்.

சிட்னியில் உண்ணா நிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த சுதா தனபால சிங்கம், மதிவண்ணன் சின்னத்துரை, பிரதீபன் ராஜதுரை ஆகியோரே 103 மணித்தியாலத்திற்கு அதிகமாக நீர் ஆகாரம் எதுவுமின்றி உண்ணா நிலைப் பேராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு போராட்டத்தை தொடங்கியிருந்த இவர்கள், பின்னர் அவுஸ்திரேலியாவின் தலைநகரான கன்பரா நாடாளுமன்றத்துக்கு அருகாமையில் இருக்கும் பிரதமரது இல்லத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நகர்த்தி அங்கிருந்தவாறு உண்ணாநிலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின் றனர்.



இதேவேளையில் சிட்னி உண்ணா நிலைப் போராட்டம் நடத்துபவர்களுடன் இணைந்து மெல்போர்னில் உண்ணா நிலைப் போராட்டத்தை நடத்தி வந்த ரமணா, ப. தெய்வீகன் மற்றும் கோ. பானு ஆகியோர் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை முதல் கன்பராவில் இணைந்து தமது உண்ணா நிலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

காற்றுடன் கூடிய கடும் குளிருக்கு மத்தி



யில்இவர்கள் உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயிரக்கணக்கான தமிழ் மற்றும் வேற்றுஇன மக்கள் அங்கு குழுமி நின்று இவர்களுக்கு தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

அதேவேளையில் சிட்னி, மெல்போர்ன், கன்பராவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் அமைப்புகள் அவுஸ்திரேலிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர் கட்சிபிரதி நிதிகள் ஆகியோரைச் சந்தித்து இந்த போராட்டம் குறித்து விளக்கமளித்து வருகின்றனர்.

இதேவேளையில் அவுஸ்திரேலியாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஸ்ரீபன் இந்த உண்ணா நிலைப்போராட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழர்கள் வன்முறையில் நாட்டம்அற்றவர்கள் எனவும் இந்தப் போராட்டத்தை கைவிடுமாறு வேண்டு கோள்விடுத்துள்ளார்.

ஆனால் தாயகத்தில் அல்லற்படும் உறவுகளுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் தகுந்த பதில் தரும் வரை தமது உண்ணா நிலைப் போராட்டத்தைகைவிடப் போவதில்லை எனக் கூறி உண்ணா நிலைப் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்கள் மறுத்து விட்டனர்.

இதேவேளையில் உண்ணா நிலைப் போராட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில் அவுஸ்திரேலியா வின் சகல பகுதிகளிலும் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மாபெரும் பேரணியினை நடத்தவுள்ளனர்.

உண்ணாநிலைப் போராட்டம் நடத்துபவர்கள் இருக்கும் அட்லெய்ட் அவெனியுவில் உள்ள விடுதிக்கு முன்னால் இன்று காலை 10மணிக்கு பேரணி நடைபெறவிருக்கின்றது. இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டிக் கொள்கின்றனர். (ஓ-6)

## இந்திய வம்சாவழி தமிழர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

மொனறாகலவில் இந்திய வம்சாவழி தமிழர்கள் மீது இனந் தெரியாதோர் நடத்திய தாக்குதல்களில் 11 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

இச் சம்பவத்தையடுத்து இப் பகுதியில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் அச்சம் காரணமாக தமது வீடுகளை விட்டு வெளியேறி காடுகளுக்குள் சென்று மறைந் திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளச்சிக் கடைத் தோட்டம், போகாலைன் தோட்டம் ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தோட்டங்களுக்குள் பிரவேசித்த இளைஞன் ஒருவரின் செய்கையால் ஆத்தரமடைந்த தமிழ் இளைஞர்கள் அவரைத் தாக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பெருமளவு இனந் தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்கள் சகிதம் இந்தக் கிராமங்களுக்குள் புகுந்து கண் மூடித் தனமாக துப்பாக்கிச் சூட்டினை நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் படுகாயமடைந்த 11 தமிழர்கள் மொனறாகலை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து இந்திய வம்சாவழி தமிழர்கள் அச்சம் காரணமாக காடுகளுக்குள் சென்று அடைக்கலம் புகுந்திருக்கின்றனர்.

பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து கொண்டு வந்து குடியேற்றப்பட்ட தமிழர்களின் வம்சாவழியினரே இப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## சுவிஸில் சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடர்ந்த கிருஷ்ணாவுக்கு மருத்துவ சிகிச்சை

### உடல் நிலையைக் கருத்திற் கொண்டு பொலிஸார் நடவடிக்கை

சுவிற்சர்லாந்தில் சாகும் வரை உண்ணா நிலைப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த சுவிஸ் தமிழர் பேரவை இணைப்பாளர் கிருஸ்ணா அம்பலவாணரின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு அந்நாட்டு பொலிஸார் அவரை வலுக்கட்டாயமாக மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர்.

வன்னியில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கட் கிழமை முற்பகல் 10.45 மணி முதல் அவர் சாகும் வரையிலான உண்ணா நிலைப் போராட்டத்தை தொடங்கியிருந்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை கிருஸ்ணா அம்பலவாணரின் உடல் நிலையை மருத்துவர்கள் பரிசோதித்தனர். அவரது உடல் நிலை மோசமடைந்திருப்பதால் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும் என அவர்கள் அறிவுறுத்தினர்.



எனினும் தனது கோரிக்கைகள் நிறைவேறும் வரை மருத்துவ சிகிச்சையை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து சுவிஸ் பொலிஸாரின் மருத்துவப் பிரிவினர் அழைக்கப்பட்டனர். சுமார் நான்கு மணி நேரமாக அவரை மருத்துவ சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல அவர்கள் முயன்ற போதும் அது கைகூடவில்லை.

எனவே சம்பவ இடத்திற்கு சுவிஸ் பொலிஸார் இரவு 8.00 மணியளவில் வருகை தந்து அவரை வலுக்கட்டாயமாக அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

கிருஸ்ணா அம்பலவாணர் உண்ணா நிலையில் இருந்த போது அவரை சுவிஸ் அரசாங்கத்தின் வெளிவிவகாரத் துறை அமைச்சக அதிகாரிகள் சந்தித்து கலந்துரையாடியதுடன், தமிழ் மக்களுக்கான இத்தகைய போராட்டத்தை வேறு வழியில் முன்னெடுத்துச் செல்லுமாறு அறிவுரை வழங்கியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் அவரை தொடர்பு கொண்டு உண்ணா நிலைப் போராட்டத்தைக் கைவிடுமாறும் இலங்கை அரசாங்கத்துடன் தாம் பேச்சு நடத்தி வருவதாகவும் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# இருபது-20 பயிற்சி ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அசத்தல்

தென்னாபிரிக்காவில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் ரெய்னா, பார்த்திப் பட்டேல் அதிரடி கை கொடுக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நாஷிவா டொல்பின்ஸ் அணியை வென்றது.

தென்னாபிரிக்காவில் நடக்கும் ஐ.பி.எல் இரண்டாவது கட்ட இருபது-20 தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் அணிகள் ஈடுபட்டு வருகின்றன.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி உள்ளூர் அணியான நாஷிவா டொல்பின்ஸை எதிர் கொண்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்றுமுதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஹைடன் (09) ஏமாற்றிய போதும் ரெய்னா (70) பார்த்திப் பட்டேல் (51) கை கொடுக்க 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 180 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டொல்பின்ஸ் அணி 139 ஓட்டங்களை மட்டும் எடுத்து 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. முரளிதரன், ஜோகிந்தர் சர்மா, அஸ்வின் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### பஞ்சாப் தோல்வி

செவர்லெட் வாரியர்ஸ் அணிக்கு எதிரான மற்றொரு இருபது-20 பயிற்சி ஆட்டத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.


இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய செவர் லெட் வாரியர்ஸ் அணிக்கு கொலின் இன்கிராம் (57) கை கொடுக்க 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு கடிச் (12) சங்க்கரா (16) போபரா (24) சுமாரான ஆரம்பம் கொடுத்தனர்.

பின்னர் வந்த கோஹ்லி (36) பொறுப்பாக ஆடி நம்பிக்கை தந்தார். எனினும் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

(5)

# பாகிஸ்தானுடனான தொடரில் பிரெட் லீக்கு வாய்ப்பு மறுப்பு



முழு உடற் தகுதி இல்லாத காரணத்தால் அவுஸ்திரேலிய ஒருநாள் அணியில் பிரட் லீக்கு மீண்டும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் பிரட் லீக்கு பதில் போலிங்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் 5 ஒரு நாள் மற்றும் ஒரு இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளன.

பாகிஸ்தானில் நடக்க இருந்த இத்தொடர் பாதுகாப்பு பிரச்சினை காரணமாக டுபாய் மற்றும் அபுதாபியில் நடக்க உள்ளது. முதல் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இத்தொடருக்கான அவுஸ்திரே லிய அணி கடந்த சில நாட்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது.

நீண்ட நாட்கள் காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த வேகப் பந்து வீச்சாளர் பிரட் லீ இத்தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் தேர்வு பெற்றிருந்தார். இந்நிலையில் முழு உடற் தகுதி இல்லாத காரணத்தால் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் தேர்வு குழுத் தலைவர் அன்ரூ ஹில்டிச் கூறுகையில், அணியின் பிசியோதெரபி அளித்த ஆலோசனையின்படி பிரட்லீயை நீக்கியுள்ளோம். அவருக்கு இன்னும் போதிய ஓய்வு தேவை. வரும் ஜூன் மாதம் லண்டனில் நடக்க உள்ள இருபது - 20 உலக கோப்பைக்குள் பிரட் லீ குணமடைந்து விடுவார் என்றார்.

# ராஜஸ்தான் அணியிலிருந்து முகமெட் கைப் அதிரடி நீக்கம்

ஐ.பி.எல். இருபது-20 தொடரிலிருந்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர் முகமெட் கைப் அதிரடியாக நீக்கப்பட்டார்.

தென்னாபிரிக்காவில் இரண்டாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இத் தொடரில் பங்கேற்க உள்ள எட்டு அணிகளும் தென்னாபிரிக்காவில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.


ஒவ்வொரு அணியும் கோப்பையை கைப்பற்றும் நோக்கில் வீரர்கள் தேர்வில் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்நிலையில் நடப்பு சம்பியனான வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர்களின் இறுதி பட்டியலை தயார் செய்து வருகிறது.

### கைப் பரிதாபம்

தொடரில் பங்கேற்கும் அணிப் பட்டியலில் இருந்து முன்னணி வீரர் முகமெட் கைப் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஐ.பி.எல் தொடரில் ராஜ



ஸ்தான் றோயல்ஸ் அணியில் இடம் பெற்ற கைப் ரூ.3.35 கோடிக்கு ஏலத்துக்கு எடுக்கப்பட்டார்.

ஆனால் தொடரில் மிகவும் மோசமாக விளையாடினார். அனைத்து போட்டிகளிலும் விளையாடிய இவர், 176 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார்.

இவரது சராசரி 16 ஆகும். இவருடன் இணைந்து மற்ற 7 வீரர்களுக்கும் அணியில் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இவர்கள் உடனடியாக தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா திரும்புகின்றனர்.

# போத்தாவின் பந்து வீச்சு முறை குறித்து மீண்டும் புகார்

(டுபாய்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் போத்தாவின் பந்து வீச்சு குறித்து ஐ.சி.சியிடம் மீண்டும் புகார் செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக போர்ட் எலிசபெத்தில் நடந்த 4 ஆவது ஒருநாள் போட்டியில் ஆடிய தென்னாபிரிக்க சுழற்பந்து வீச்சாளர் ஜோகன் போத்தாவின் பந்து வீச்சு குறித்து ஆட்ட நடுவர்கள் பிரையன் ஜெர்லிங், அசோக் டி சில்வா மற்றும் 3 ஆவது நடுவர் ருடிகோர்ட்சன் ஆகியோர் சந்தேகம் எழுப்பி உள்ளனர்.

போத்தா விதிகளுக்கு புறம்பாக முறையற்ற வகையில் பந்து வீசுவதாக நடுவர்கள், போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லேயிடம் புகார் செய்தனர்.

அவர் இது பற்றி சர்வதேச கிரிக்கெட் சபைக்கும் (ஐ.சி.சி), தென்னாபிரிக்க அணி நிர்வாகத் துக்கும் தகவல் அனுப்பி உள்ளார்.

போத்தா வேகமாக வீசும் பந்துகளும், தூஸ்ரா முறையில் வீசும் பந்துகளும் அவரது பந்துவீச்சு முறை குறித்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.


### பயோ-மெக்கானிக்கல் சோதனை

ஐ.சி.சியிடம் இருந்து இது குறித்த அதிகாரப்பூர்வமாக நோட்டீஸ் வந்த பின்னர் 21 நாட்களுக்குள் போத்தாவின் பந்து வீச்சு முறை குறித்து பயோ-மெக்கானிக்கல் பந்து வீச்சு சோதனை நடத்தப்படும். அதுவரை அவர் தொடர்ந்து சர்வ தேச போட்டியில் விளையாடலாம்.

பந்து வீச்சு சர்ச்சையில் போத்தா சிக்குவது இது 2 ஆவது முறையாகும்.

ஏற்கனவே 2006ஆம் ஆண்டும் இதே போன்ற புகாருக்குள்ளான போத்தா, பரிசோதனைக்குட்படுத்தப் பட்டு பந்துவீச தடை விதிக்கப்பட்டார்.

அதன்பின்னர் அவர் தனது பந்து வீச்சை சரிசெய்து கொண்டதற்கான பரிசோதனையை முடித்த பின்னர் 2007 ஆம் ஆண்டு மீண்டும் பந்து வீச அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 63





கொங்கொங் பல்கலைக்கழக விஞ்ஞான தொழில் நுட்ப பேராசிரியர் ரவி குணதிலகவினால் சுமார் 3 1/2 மணி நேரம் நவீன மின்னியல் தொழில் நுட்பங்கள் மூலம் முரளிதரன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

### முரளி பந்தை எறியவில்லை

இவ்வறிக்கையில் பேராசிரியர் ரவி குணத்திலக குறிப்பிட்டிருந்ததாவது,

பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ள முரளிதரனின் பந்து வீச்சு முறை கிரிக்கெட் விதிகளுக்கு உட்பட்டதே. அவர் பந்தை எறியவில்லை.

பாலா


முரளிதரன் தனது வளைந்த கையைப் பயன்படுத்தி பந்தை வீசும் போது அவர் பந்தை எறிவது போன்ற ஒரு மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

முரளிதரன் பந்து வீசும் போது உடல் ஸ்திர நிலையை அளவிடுவதற்காக அவரது வலது கைவிரல்கள், மணிக்கட்டு முதலியவற்றை சுற்றிய மின்னியல் கம்பிகள் மூலம் பிணைக்கப்பட்ட நவீன கருவி மூலம் அளவீடு செய்யப்பட்டது.

இப்பரிசோதனையின் தகவல்களின் பிரகாரம் முரளிதரனின் பந்து வீச்சு எறிதலல்ல எனக் கண்டறியப்பட்டது என அதில் குறிப்பிட்டிருந்தார்.

இவ் அறிக்கை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் அதிகார பூர்வமாக கையளிக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கும் ஆராயப்பட்டது. (பயணிக்கும்)

# எண் விளையாட்டு-65



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங் களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை



# குறுகியகால போர் நிறுத்தத்தால் வன்னி மக்களை காப்பாற்ற முடியாது

## இந்தியாவிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(புதுடில்லி)

மகிந்த ராஜபக்ச அறிவித்த இரண்டு நாள் போர் நிறுத்தத்தால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேன னிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் மட்டும் 200 அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். தற்போதைய நிலையில் முல் லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் குறுகிய பகுதியில் இரண்டரை லட்சம் மக்கள் உள்ளனர். தற்போதைய நிலையில் அவர்களுடைய உயிர்களுக்கு பாதுகாப்பு இல்லை எனச் சுட்டிக்காட்டியிருப்பதுடன் அவர்களின் உயிர்களை பாதுகாக்க வேண்டுமானால் உடனடியாக போர் நிறுத்தம் செய்வது அவசியம் என்பதையும் வலியுறுத்தினர்.

இந்தியத் தலைநகர் புது டில்லி சென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், இந்திய வெளி விவகார செயலாளர் சிவ்சங்கர் மேனனை நேற்று வியாழக்கிழமை சந்தித்து வன்னியில் உருவாகியிருக் கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக விரி வாக விளக்கியுள்ளனர்.

இந்தியப் பிரதமரின் இல்லத்தில் நேற்று மாலை 4 மணிக்கு தொடங்கிய சந்திப்பு சுமார் ஒரு மணி நேரத்திற்கு நீடித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் புதுடில்லி சென்றுள்ள கூட்டமைப்பின் தூதுக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் உள்ளடங்கி யுள்ளனர். வன்னி நிலைமைகள் மக்கள், அனுபவிக் கும் துன்பங்கள் தொடர்பாக விளக்கிக் கூறிய சம்பந் தன், உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அதற்கான அழுத்தங்களை இந்திய அரசாங்கம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளிவிவகாரத்துறை செயலருடனான சந்திப்பு மனநிறைவளிக்கும் வகையில் அமைந்திருந் ததாகவும் தெரிவித்த அவர், இச் சந்திப்பின் போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் இன்று வெள் ளிக்கிழமை நடைபெறும் ஊடகவியலாளர்களுட னான சந்திப்பின் போது வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார். (ச-5)

## மீண்டுமொரு போர் நிறுத்த...

அரசு பிறிதொரு மோதல் நிறுத்த காலத்தை அறிவிக்க வேண்டும் என்றும் பிரிட்டனும் பிரான்ஸும் கூட்டாக வேண்டுகோள் விடுத் துள்ளன.

பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபான்டும், பிரான்ஸ் வெளியுறவு அமைச் சர் பேனாட் குஸ்ஸளுமும் நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே இதனைத் தெரிவித் துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவி னால் ஏப்ரல் 12ஆம் திகதி அறிவிக்கப்பட்ட மோதல் இடைநிறுத்தம் பொதுமக்களை பாதுகாப்பதற்கான முதல்படி நிலை.

எனினும் மிகச்சிறிய மோதல் நிறுத்த காலத்தில் பொதுமக்கள் பெருமளவில் பாது காப்பான இடங்களை நோக்கி நகராததை யிட்டு கவலையடைகிறோம்.

பொதுமக்கள் இந்த மோதல் பகுதிகளிலி ருந்து வெளியேறாமல் இருப்பது அவர்களை விடுதலைப் புலிகள் பலவந்தமாக தடுத்து மனிதக் கேடயமாக பயன்படுத்துகிறார்கள் என்பதையே காண்பிப்பதாகவும் பிரிட்டனும் பிரான்ஸும் அந்த அறிக்கையில் குறிப்பிட் டுள்ளன.

இலங்கை பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வு ஒன்றை காணும் வகையில் விடுத லைப் புலிகள் பயங்கரவாதத்தை கைவிட்டு ஆயுதங்களைக் களைய முன்வரவேண்டும்.

இலங்கை ஜனாதிபதி மீண்டுமொரு மோதல் இடைநிறுத்தத்தை அறிவிக்க வேண் டும். அது பொதுமக்கள் ஆபத்தான பகுதிகளி லிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு நகர போதுமான கால அளவை கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-14)

## முள்ளிவாய்...

மனையினதும் நட்டாங்கண்டல் மருத்துவ மனையினதும் சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளன் மருத்துவமனைக்குச் செல் லும் வீதி படையினரின் கடுமையன எறிக ணைத் தாக்குதல்களுக்கு இலக்காகியிருப் பதனால் காயமடைந்தவர்களை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (ச-5)

## ஐ.நா. பிரதி...

ராஜபக்ஷவை நேற்று சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் நேற்று மாலை 5 மணிக்கு இச் சந்திப்பு இடம் பெற்றதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐ.நாவின் அரசியல் விவகார திணைக் களத்தைச் சேர்ந்த ஹிற்றோக்கி டென்னும் இவருடன் கொழும்பு வந்திருக்கின்றார்.

இவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை யும் சந்தித்து பேச்சுக்களை நடத்தவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப் பை அவர்கள் நிராகரித்திருந்தனர். ஜனாதிப தியுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இந்தியத் தலைமைகளுடன் பேசுவதில் அர்த்தமில் லை என்றே அரசாங்கம் கருதுகிறது.

முதலில் ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதன்பின் னரே அவர்கள் ஏனைய விடயங்கள் குறித்து ஆராய வேண்டும். பிரச்சினைகளுக்கான தீர்வை இரு தரப்புக்களும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே காண முடியும் என் றார். (ச-5)

## நோர்வே...

தாக்குதல் குறித்து விசாரணை நடத்த நடவ டிக்கை எடுக்க வேண்டுமெனவும், இலங்கை யிலுள்ள நோர்வேத் தூதரகம் மூடப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தும் பதாகைக ளை ஏந்தியிருந் தனர். (ச-5)

## அரசின் 48 மணிநேர போர் நிறுத்தம் மக்களை வெளியேற்ற போதுமானதல்ல

## ஐ.நா. சுட்டிக்காட்டு

அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களை இரண்டு நாட்கள் மாத்திரம் நிறுத்தியமை போதுமானதல்லவென ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. மோதல்கள் நடை பெறும் பகுதிகளில் சிக்குண்டிருக்கும் ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்களை பாதுகாப் பான பகுதிகளுக்கு வெளியேற்ற இந்த 2 நாள் மோதல் நிறுத்தம் போதுமானதாக இருக்கவில்லையென ஐக்கிய நாடுகள் மனித நேய விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜோன் ஹேம்ஸ் கூறினார்.

குறிப்பிட்டளவு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்கவோ அல்லது மனித நேயப் பணியாளர்களை அனுப்பி உரிய நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கோ 48 மணித்தி யாலங்கள் போதுமானதல்ல என்பது அனை வருக்கும் தெளிவாகத் தெரியும்.

இந்தக் காலப் பகுதியில் பெருமளவான மக்களை வெளியேற்ற முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்ற போதும் துரதிர்ஷ்ட வசமாக மோதல் தவிர்ப்பு காலப் பகுதியில் வெளி யேறிய மக்களின் எண்ணிக்கை இதற்கு முன்னர் வெளியேறியவர்களின் எண்ணிக் கையையும் விட மிகக் குறைவாகவே காணப் பட்டது என்றார்.

பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களை இந்தமோதல் தவிர்ப்பு காலப் பகுதியில் வெளியேற விடுதலைப் புலிகள் அனுமதிக்க வில்லை. பொதுமக்களை மனித கேடயங்க ளாக பயன்படுத்தக்கூடாது.

பொதுமக்கள் வெளியேற விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும். இரண்டு நாட் களுக்கு மேலான மனிதநேய மோதல் நிறுத்த மொன்றுக்கு இரண்டு தரப்பினரும் செல்ல வேண்டியது அவசியம். பெப்ரவரி மாதம் இலங் கைக்கு விஜயம் மேற்கொண்டு இடம் பெயர்ந்த மக்களின் நிலைமைகளை அறிந்து சென்று ஐ.நா பாதுகாப்புச் சபையில் அறிக்கை யொன்றையும் சமர்ப்பித்திருந்தார்.

### புலிகளுடன் நேரடியாகப் பேச்சு

பாதுகாப்பு வலயத்திலுள்ள பொதுமக்க ளை விடுவிப்பது தொடர்பாக கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகளுடன் தான் நேரடியாக கலந்துரையாடியதாகவும் ஐ.நா மனித நேய விவகாரங்களுக்கான செயலா ளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் கூறியுள்ளார்.

நான் விடுதலைப் புலிகளுடன் தொடர் புகளை ஏற்படுத்தியிருந்தேன். அவை கள நிலைமைகள் தொடர்பானவை அல்ல. அதற் கும் அப்பால் பொதுமக்கள் அவர்களின் விருப்பங்களுக்கு எதிராக தடுத்து வைக்கப் பட்டுள்ளனரா என்பது பற்றியே கலந்துரை யாடியிருந்தேன் என அவர் தெரிவித்தார்.

ஆனாலும் பொதுமக்களின் விருப்பத் திற்கு மாறாக மக்களைத் தாம் தடுத்து வைத்தி ருக்கவில்லையென விடுதலைப் புலிகள் பதி லளித்ததாகவும் ஹோம்ஸ் கூறினார். (ச-5,14)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கிளி நொச்சிக்கு திடீர் விஜயமொன்றை மேற் கொண்டார். 30 வருடங்களுக்குப் பின்னர் நாட்டின் தலைவர் ஒருவர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தமை இதுவே முதல் தடவையா கும்.

நேற்றுக்காலை 6 மணிக்கு கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு சிகிச்சை பெற்று வரும் படையின ரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

படையினரின் சேமநலன்கள் பற்றிக் கேட்டறிந்து கொண்ட ஜனாதிபதி தனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். படையினருடன் ஒன்றாக அமர்ந்து புத்தாண்டு விருந்து நிகழ்ச்சியிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

பின்னர் கிளி நொச்சியிலுள்ள சிரேஷ்ட இரா ணுவ அதிகாரிக ளுடன் கலந் துரையாடிய ஜனாதிபதி, கிளி நொச்சியின் தற் போதைய நிலை மைகள் மற்றும் படையினரின் முன்னேற்ற விபரங்கள் என் பன தொடர்பாகவும் அறிந்து கொண்டார். விடுதலைப் புலி களிடமிருந்து படையினரால் அண்மையில் கைப்பற்றப்பட்ட விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் யுத்த தாங்கி கள் உட்பட ஏனைய ஆயுதங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்திய வீடு, அர சியல்துறை அலுவலகம் மற்றும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் ஆகியவற் றையும் ஜனாதிபதி நேரில் சென்று பார்வை யிட்டார். வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந் தித்துக் கலந்துரையாடுவதற்கு விடுதலைப் புலிகள் பயன்படுத்திய கட்டிடங்கள் மற்றும் மாநாட்டு மண்டபங்கள் என்பனவற்றுக்கும் ஜனாதிபதி விஜயம் செய்தார்.

பின்னர் படையினர் மத்தியில் உரையாற் றிய ஜனாதிபதி, பாதுகாப்புப் படையினரின் அர்ப்பணிப்பு மற்றும் திடசங்கற்பம் மிக்க சேவைக்காக அவர்களுக்கு தேசத்தின் கௌரவம் உரித்தாகட்டும் எனப் பாராட்டுத் தெரிவித்தார். பொதுமக்களுக்கு எவ்வித பாதிப் புக்களும் ஏற்படாத வகையில் புலிகளிடம் சிக்கி யுள்ளவர்களை பாதுகாப்பாக மீட்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி இங்கு கோரிக்கைவிடுத்தார்.

இதேவேளை கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியி லேயே ஜனாதிபதி கிளிநொச்சிக்குச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதியுடன் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ,பாதுகாப்பு அமைச்சின் பிரதம அதிகாரி ஏயர் மார்சல் டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண ஆகி யோரும் ஜனாதிபதியுடன் கிளிநொச் சிக்கான இந்தப் பயணத்தில் இணைந்திருந்தனர். உலங்குவானூர் திகளில் கடுமையான பாதுகாப்பு ஏற் பாடுகளுக்கு மத்தியில் அவர்களின் பயணம் இடம்பெற்றிருந்ததாக தெரி விக்கப்பட்டது. (ச-3,5,14)


### இடம் மாற்றமும், மலிவு விற்பனையும்

சகல விதமான சைக்கிள் உதிரிப்பாகங்கள், வீட்டு மின் இணைப்புக்குத் தேவையான மின் சாதனப்பொருட்கள் (வயர்),கிறைண்டர்,சாச்சர் லைற், 6Vபற்றி, றைஸ்குக்கர், காஸ் குக்கர், பிறசர் குக்கர், மண்ணெண்ணெய் குக்கர், ஸ்ரப்பிளைசர், அயன் பொக்ஸ், கொட் பிளேற், மின்கேத்தல், கீற் றர், அவண், சிற்றிசன், கச்சியோ, சீக்கோ கை மணிக் கூடுகள், சுவர் மணிக்கூடுகள் ஆகியவற்றை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் புட்போல், வோலிபோல் கறம் போட் அன்பளிப்பு பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

நியூ சிற்றி ரேடர்ஸ், 319 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு; மேற்படி எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரில் வேறு கிளைகள் இல்லை.

T.P. 021 222 3226

(C-2351)

நாளை ஆரம்பம்

A/L 2011

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)

கலை 8 மணி | வர்த்தகம் 11 மணி

DMI யாழ்ப்பாணம்.

ஸ்ரான்லி வீதி. நாவலர் வீதி.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலைய

தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும்-2008

சித்திரை 18ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை

இடம் : யாழ்.இந்துக் கல்லூரி

நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிராம அபிவிருத்தி திணைக்களம், யாழ்.மாவட்டம்.

(2514)

"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்..." (மாற்கு 1:15)

வாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும்

- 2009 ஏப்ரல் 15ஆம் திகதி புதன் மாலை முதல் 19ஆம் திகதி ஞாயிறுவரை
- தினமும் மாலை 5.00 முதல் 7.30 வரை
- இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலை, 111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

"அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்." (சங்கீதம் 107: 20)

*பிசாசின் பிடி,பாவம்,மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.*

இலவச உட்பிரவேசம்! காணிக்கை சேர்க்கப்படமாட்டாது!! வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்!!!

(C-2349)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.